சக்தி மலர் 7

ஏ. கே. செட்டியார்

அமெரிக்கா

ஸ்ரீ ஏ. கே. செட்டியார் இருமுறை அமெரிக்கா சென்று, அந்நாட்டில் இருபத்தையாயிரம் மைல்களுக்கு மேல் பிரயாணம் செய்திருக்கிறார். அவர் தமது பிரயாண அனுபவங்களை இந் நூலில் எழுதியுள்ளார்.

சக்தி மலர் 8, 9, 10

டால்ஸ்டாய்

சிறுகதைகள்

1, 2, 3 பாகங்கள்

ஒவ்வொரு பாகமும்

விலை ரூபாய் ஒன்று

அமெரிக்கா

[பிரயாண நூல்]

☆

ஸ்ரீ ஏ. கே. செட்டியார்
எழுதியது

☆

சக்தி காரியாலயம்
46, முத்துமாரி செட்டித் தெரு, சென்னை

 [விலை ரூ. 1-0-0

முதற் பதிப்பு: விஷு, ஆடி

சக்தி பிரஸ் லிமிடெட் (சாந்தி பிரஸ்), சென்னை.

பதிப்புரை


தமிழில் மேன்மேலும் பிரயாண நூல்களை வெளியிட்டு, தமிழ்நாட்டு மக்களுக்கு பிறநாடுகளைப்பற்றியும் அவைகளின் மக்களைப் பற்றியும், அவர்களின் வாழ்க்கை, கலை, வாணிபம் முதலியவைகளைப்பற்றியும் அறிவூட்டுவது எமது நோக்கங்களில் ஒன்றாகும்.

இக்கருத்தைக்கொண்டே யாம் பல வெளிநாடுகட்கும் சென்றுவந்த ஸ்ரீ ஏ. கே. செட்டியாரைக்கொண்டு இரண்டு நூல்கள் வெளியிட்டுள்ளோம். தமிழ் நாட்டார் இவைகளை ஆவலுடன் வரவேற்றது போன்று 'அமெரிக்கா' என்னும் இம்மலருக்கும் ஆதரவளித்து, பயனடைவார்களாக!


★

சக்தி காரியாலயம்.

பொருள் அடக்கம்



ஆசிரியர் சுற்றுப்பிரயாணம் செய்த
வழியைக் குறிக்கும் இருப்புப்பாதை



ஆபிரகாம் லிங்கன்



சுதந்திரச் சிலை




'காங்கிரஸ் ஹவுஸ்'
வாஷிங்டன் டி. சி.



பிரசிடெண்ட்
ரூஸ்வெல்ட்



நியூயார்க்




ஆர். சி. ஏ. பில்டிங்
ராக்பெல்லர் சென்டர்
நியூயார்க்



டெட்ராயிட்




போர்டு மோட்டார் தொழிற்சாலை



பார்டின் முதல் மோட்டார்




ஹென்ரி போர்டின் 25-வது மிலியன் மோட்டார்



ஹென்ரி போர்டும்
தாமஸ் எடிசனும்

கோடக் தொழிற்சாலையில்
லென்ஸ்களை பரிசோதித்தல்





ரெட்வுட்
எம்பயர்




ரெட்வுட்
எம்பயர்



ஹாவாய் நடனப் பெண்கள்



வாலிபமும்
அமெரிக்காவும்



ஐக்கிய அமெரிக்க
தேசியக் கொடி

அமெரிக்கா

1. சுதந்தர நாடு

"மக்களால், மக்களுக்காக, மக்களுடைய அரசாங்கம்" என்ற கொள்கையை நிலை நாட்டிய ஆபிரகாம் லிங்கன் பிறந்த நாடு *அமெரிக்கா. "சுதந்தரம் அல்லது மரணம்—இரண்டில் ஒன்றைக் கொடு" என்று கர்ஜித்த சுதந்தர வீரனான பாட்ரிக் ஹென்ரி பிறந்த நாடு அமெரிக்கா. மின்சாரத்தின் எண்ணில்லாத உபயோகங்களைக் கண்டுபிடித்த விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிஸன் பிறந்த நாடு அமெரிக்கா. பலமிருந்தும், ஏகாதிபத்தியப் பைத்தியம் பிடிக்காத வெள்ளையர்கள் வாழும் நாடு அமெரிக்கா.

அமெரிக்கா ஒரு புதிய உலகம். நிலப் பரப்பில், இந்தியாவைவிட மூன்று மடங்கு

* அமெரிக்கா என்று கூறும்பொழுது ஐக்கிய அமெரிக்க நாடுகளையே குறிப்பிடுகிறேன்.

பெரியது. ஆனல், ஜனத்தொகையோ இந்தியாவில் உள்ளதில் மூன்றில் ஒரு பங்குதான்.

அமெரிக்காவின் பூர்வீகக் குடிகளுக்கு, சிவப்பு இந்தியர்கள் என்று பெயர். அவர்களின் நிறம் சிவப்பல்ல. அவர்கள் இந்தியர்களுமல்லர். ஆனல், பெயர்மட்டும் சிவப்பு இந்தியர்கள்!

கொலம்பஸ், இந்தியாவைக் கண்டுபிடிக்க, 1492-ஆம் வருடம் யாத்திரை கிளம்பினர். இந்தியாவைக் காண்பதற்குப் பதிலாக, அமெரிக்காவைக் கண்டார். இந்த நாட்டுப் பூர்வீகக் குடிகள் அவருக்குத் தொந்தரவு கொடுத்தார்கள். கொலம்பஸ், இவர்களிற் சிலரைக் கைது செய்து, ஸ்பானியர்களின் நியாய ஸ்தலத்தின் முன்பு நிறுத்துகையில், 'சிவப்பு இந்தியர்கள்' என்று அவர்களை அழைத்தார்.

1501-ஆம் வருடத்தில், அமெரிகோ வெஸ்புக்கி என்ற இத்தாலியர் தென்னமெரிக்காவிலுள்ள பிரேஸில் என்ற நாட்டைக் கண்டுபிடித்தார். பின்னர், ஐரோப்பா திரும்பியதும், தம்முடைய செயல்களைக் குறித்து ஒரு புத்தகம் வெளியிட்டார். அதுமுதல் இந்நாட்டுக்கு அமெரிக்கா என்று பெயர் வழங்குகிறது.

இந்நாட்டில் முதலில் குடியேறிய வெள்ளையர்களுக்கும் பூர்வீகக் குடிகளான சிவப்பு இந்தியர்களுக்கும், பல பெரும் போர்கள் மூண்டன. அந்தப் போர்களில் சில வெள்ளையரே மாண்டனர் ; இந்தியர்களுக்குத்தான் அதிகச் சேதம். பல்லாயிரக் கணக்கான இந்தியர்களை அமெரிக்கர்கள் ஈவிரக்கமின்றிக் கொன்றதாகத் தெரிகிறது.

அமெரிக்கா சில நூற்றாண்டுகளாகப் பல ஐரோப்பிய நாட்டினரின் ஆதிக்கத்திலேயே இருந்தது. யார் யார் கைகளுக்கு ஆதிக்கம் மாறுகிறதோ, அவர்களுடைய குடியேற்ற நாடாகவு மிருந்தது.

1763-ஆம் ஆண்டில் பாரிஸ் உடன்படிக்கை நடந்தபொழுது, அமெரிக்காவில் மிஸிஸிப்பி நதிக்குக் கிழக்கேயுள்ள தன்னுடைய நாடு பூராவையும், இங்கிலாந்துக்கு, பிரான்ஸ் கொடுத்துவிட்டது.

அமெரிக்காவுக்கு இங்கிலாந்து இழைத்த கொடுமைகள் அனைத்தும் அமெரிக்க சுதந்தரப் பிரகடனத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. அமெரிக்கா தன்னுடைய சுதந்தரப்

போரில் இறங்கி வரிகொடா இயக்கம் ஒன்றை ஆரம்பித்தது. "பிரதிநிதித்துவ மில்லாவிட்டால், வரி கொடுக்க முடியாது" என்று அமெரிக்கர்கள் கூறிவிட்டார்கள். தனது ராஜதந்திரிகளின் முட்டாள் தனத்தினுல், அமெரிக்காவை இங்கிலாந்து இழந்தது. 1783-ஆம் வருஷம் அமெரிக்கா ஒரு சுதந்தர நாடாயிற்று.

ஐக்கிய அமெரிக்க நாட்டில் மொத்தம் 48 ஸ்டேட்டுகள். பதின்மூன்று ஸ்டேட்டுகள் முதலில் ஐக்கிய மாயின. மற்ற ஸ்டேட்டுகள் பிறகு சேர்ந்து கொண்டன. ஹாவாய்த் தீவுகளை 49-ஆவது ஸ்டேட்டாகச் சேர்க்க முயற்சிக்கிருர்கள். அமெரிக்காவின் கீழுள்ள நாடு பிலிப்பைன் தீவு ஒன்றுதான். இந்தத் தீவுக்குச் சுதந்தரம் அளிக்க, அமெரிக்கர்கள் தயாரா யிருக்கின்றனர். ஆனுல், பிலிப்பைன் தேசத் தலைவர்களில் பலர், ஜப்பானுல் தங்கள் சுதந்தரத்துக்கு ஆபத்து வருமென்று அஞ்சி, அமெரிக்காவுடன் சமாதானமாய்ச் சேர்ந்து வாழ விரும்புகிருர்கள்.

அமெரிக்காவின் மொத்த ஜனத்தொகை சுமார் 12 கோடி. இதில் ஒன்றேகால் கோடி

பேர் நீக்ரோக்கள். ஒரு காலத்தில் அடிமை வர்த்தகம் அமெரிக்காவில் உச்ச நிலையில் இருந்தது. அப்பொழுது இந்த நீக்ரோக்கள் ஆபிரிக்காவி லிருந்து கொண்டுவரப்பட்டனர். ஆபிரகாம் லிங்கன் சட்ட பூர்வமாக அடிமைகளை விடுவித்தார்.

நீக்ரோக்களை வெள்ளையர்கள் படுத்திய பாடு கொஞ்ச நஞ்ச மல்ல. அமெரிக்காவில் நிற வெறி கொண்ட ஒரு ரகசியச் சங்கம் இருக்கிறது. அதற்கு, கூக்ளக்ஸ் கிளான் (Ku Klux Klan) என்று பெயர். அமெரிக்கா முழுதும் வெள்ளையரின் ஆதிக்கத்தில் இருக்க வேண்டுமென்பதும், மற்ற நிறத்தவர்களை எந்த விதத்தாலாவது தொலைத்து விடவேண்டு மென்பதும் அந்தச் சங்கத்தினர்களின் கொள்கை. அவர்கள் கறுப்புத் துணியால், கண் தவிர, தங்கள் முகம் முழுவதையும் மூடிக்கொண்டு சந்திப்பார்கள். இம்மாதிரியான சந்தர்ப்பங்களிலே, நீக்ரோக்களை உயிரோடு கொளுத்துவார்கள். பாவம்! அந்த நீக்ரோக்கள் நெருப்பிலே துடிக்கும்போது, இந்த வெள்ளையர்கள் சந்தோஷ ஆரவாரம் செய்து மகிழ்வார்கள்.

நீக்ரோக்களுக்கு அமெரிக்கர்கள் சம உரிமை அளிக்க வில்லை. நீக்ரோக்களின் ஜனத் தொகைக்குத் தக்க அளவு, அவர்களுக்கு அரசாங்கத்தில் பிரதிநிதித்துவ மில்லை. ஆனால், தொழிலாளர்களைப் பொறுத்தவரை, பெரும்பாலும் வெள்ளை அமெரிக்கரும் கறுப்பு அமெரிக்கரும் ஒரே மாதிரியாகவே கூலி பெறுகிறார்கள்.

அமெரிக்காவில் வெள்ளையர்களின் பிறப்பு விகிதத்தைவிட, நீக்ரோக்களின் பிறப்பு விகிதம் பல மடங்கு அதிகமா யிருக்கிறது. இப்படியே இன்னும் நாற்பது ஐம்பது வருடங்கள் சென்றால், ஜனத்தொகையில் தங்களுக்குச் சமமாக நீக்ரோக்களும் வந்து விடுவார்களோ என்ற அச்சம் வெள்ளையர்களுக்கு இருக்கிறது.

உலகத்துக்கே ஜனநாயக வழிகாட்டியாய் இருப்பதாகப் பெருமை பாராட்டிக்கொள்ளும் அமெரிக்கா, நீக்ரோக்களின் விஷயத்தில் அதிருப்தியாக நடந்துகொள்கிறது; இங்கே தான் ஜனநாயகம் தோல்வி அடைகிறது.

அமெரிக்காவில் எல்லா நாட்டு மக்களும் குடியேறி யிருக்கிறார்கள். ஐரோப்பாவிலுள்ள

சகல நாட்டு மக்களையும் இங்கே காணலாம். ஆப்பிரிக்கர்கள், சீனர், ஜப்பானியர், இந்தியர் ஆகியோரும் அமெரிக்காவில் குடியேறி யிருக்கிறார்கள்.

கலிபோர்னியா ஸ்டேட்டில் மட்டும், சுமார் 5,000 இந்தியர்கள் இருக்கிறார்கள். இவர்கள், சென்ற உலக யுத்தத்துக்குமுன் குடியேறியவர்கள். "வெளி நாட்டிலிருந்து அமெரிக்காவில் குடியேறியவர்களில், ஹிந்துக்கள்தான் கல்வி வாசனை யற்றவர்கள்" என்று அமெரிக்க அரசாங்க ரிக்கார்டு ஒன்று கூறுகிறது. அமெரிக்காவில், இந்தியர்கள் யாரா யிருந்தாலும், அவர்களை 'ஹிந்துக்கள்' என்றுதான் அழைப்பது வழக்கம். கலிபோர்னியாவில் குடியேறிய ஹிந்துக்களில் பெரும்பாலோர் சீக்கியர்கள். இவர்கள் விவசாயிகள். இவர்களுக்குள், மத சம்பந்தமாக இரு கட்சிகள் உண்டு. இந்த இரண்டு கட்சிகளுக்கும் அடிக்கடி சண்டை உண்டாகும். ஒவ்வொரு சண்டையிலும் சில மண்டைகள் உருளும். அதனால், பொதுவாக, கலிபோர்னியாவில் ஹிந்துக்களுக்கு அவ்வளவு 'நல்ல பெயர்' இல்லை. இப்பொழுது இந்தி

யர்களை அமெரிக்காவில் குடியேற அனுமதிப்ப தில்லை. வியாபாரத்துக்கோ, அல்லது படிப் புக்கோ, அல்லது ஊர் சுற்றிப் பார்ப்பதற்கோ செல்லும் இந்தியர்களை, குறிப்பிட்ட காலம் வரைதான் அமெரிக்காவில் தங்க அனுமதிப் பார்கள். ஏற்கனவே குடியேறியுள்ள இந்தியர் களுக்குங்கூடப் பிரஜா உரிமை (citizenship) கிடையாது. அடிமை நாட்டினருக்கு உரிமை வேறுண்டோ ?

உலகத்திலே யுள்ள சுதந்தர நாடுகளில் அதிகமான சுதந்தரத்தை யுடைய நாடு அமெரிக்கா ஒன்றுதான். நசுக்கப்பட்ட நாடு களின் மீது அமெரிக்கர்களுக்கு எப்பொழுதும் அனுதாபம் உண்டு. இந்தியாவினிடத்து அமெ ரிக்கர்களுக்கு நிறைய அனுதாபமும் நல் லெண்ணமும் உண்டு. இந்தியத் தலைவர்க ளான மகாத்மா காந்திக்கும் ஜவஹர்லால் நேருவுக்கும், அமெரிக்காவில் பெரு மதிப்பு.

இந்தியாவில் ஜனநாயகம் என்ற போர் வையின்கீழ் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஏகாதி பத்திய ஆட்சி நடத்துகிறார்க ளென்பது, விஷய முணர்ந்த அமெரிக்கர்களுக்குத்தான்

தெரியும். சாதாரணமாகத் தெருவில் செல்லும் ஓர் அமெரிக்கனுக்கு, இந்த விஷயம் தெரியாது. இந்தியாவுக்கு விரோதமாகப் பெரும் பிரசாரமொன்று பல வருடங்களாக, அமெரிக்காவில் பிரிட்டிஷாரால் நடத்தப்பட்டு வருகிறது. பிரிட்டிஷ் அரசாங்கமேகூட, தனக்குச் சாதகமான சில இந்தியத் 'தேசபக்தர்'களை, இந்தத் தர்ம கைங்கரியத்துக்காக, அமெரிக்காவுக்கு அனுப்பியிருக்கிறது.

பொய்ப் பிரசாரம் செய்வதிலே உலகில் முதல் நம்பர் புளுகரான டாக்டர் கோபெல்ஸ் கூட, பிரிட்டிஷாரிடம் பிச்சை வாங்கவேண்டும். இந்தியர்கள் அநாகரீகமானவர்கள் என்றும், பிரிட்டிஷார் இந்தியாவைவிட்டுச் சென்று விட்டால் இந்தியா அடியோடு நாசமாகி விடும் என்றும், இந்தியாவின் நன்மைக்காகவே ஆங்கிலேயர்கள் இந்தியாவில் அரசாட்சி நடத்துவதாகவும், அமெரிக்காவில் பிரசாரம் நடைபெறுகிறது. ஆனல், இந்தியர்களின் கட்சியை எடுத்துரைக்கக்கூடிய யாரையும், அங்கே செல்ல, நமது அரசாங்கத்தார் அனுமதிப்பதில்லை.

பிரிட்டிஷ் அரசாங்கம் உண்மையிலேயே இந்தியாவில் ஜனநாயக ஆட்சி நடத்தினால், இந்தியர்களை, வெளிநாடுகளுக்கு - அதிலும் அமெரிக்காவுக்கு - செல்ல விடாமல் ஏன் தடுக்கிறது? இந்தியாவில் நடக்கும் விஷயங்களை மறைத்து வைத்துக்கொண்டு, பிரிட்டிஷ் அரசாங்கம் ஏன் அமெரிக்காவிடம் தலை குனிந்து பிச்சை கேட்கவேண்டும்?

பிறருடைய உதவியினால் இந்தியா சுதந்தரமடைய ஒரு போதும் விரும்பிய தில்லை; விரும்பப் போவது மில்லை. ஆனால், பிறருடைய அனுதாபம் நாம் சுதந்தரம் அடைவதற்கு உதவியாக இருக்குமானால், அதை நாம் ஏன் பெறக் கூடாது?

வெளிநாடுகளில் - அதிலும் சிறப்பாக அமெரிக்காவில் - இந்தியாவைப்பற்றிப் பிரசாரம் செய்யும் அவசியத்தை நன்குணர்ந்த ஒரே ஒரு தலைவர்தான் நம் நாட்டில் இருந்தார். அந்த வீர புருஷன் வித்தல்பாய் படேல் இன்று மறைந்துவிட்டார்.

அமெரிக்காவின் அனுதாபத்தை நாம் மிகப் பெரிதாக மதிப்பிட வில்லை. அதன்

அளவை நாம் அறிவோம். ஏனெனில், அமெரிக்கர்கள் முதலில் வியாபாரிகள்; பிறகுதான் மனிதர்கள்.

---

2. போகும் வழியிலே

முதலாவது பிரயாணத்தில், பசிபிக் சமுத்திரத்தின் வழியாக,அமெரிக்காவுக்குச் சென்றேன். ஜப்பானிலிருந்து ஆறாயிரம் மைல்களுக் கப்பால் இருக்கிறது அமெரிக்கா. யோகஹாமா துறைமுகத்திலிருந்து 'ஹெய்யோமாறு' என்ற சிறிய ஜப்பானியக் கப்பலில் பிரயாணமானேன். ஹாவாய்த் தீவுகளை அடைவதற்கு, பதினேரு தினங்களாயின; ஏன், உண்மையில் பன்னிரண்டு தினங்களாயின.

சாதாரணமாக, ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்குச் செல்லும்பொழுது, கடிகாரத்தில் மணிநேரம் வித்தியாசப் படுகிறதல்லவா? அதனுல் ஜப்பானிலிருந்து அமெரிக்கா செல்லும் பொழுது, நமக்கு ஒரு நாள் லாபம்; அமெரிக்காவிலிருந்து ஜப்பானுக்கு வரும் பொழுதோ, ஒருநாள் நஷ்டம்.

ஹாவாய்த் தீவுகளை அடைவதற்கு இரண்டு தினங்களுக்கு முன், கப்பலில் ஒரு நோட்டீஸ் காணப்பட்டது. அதில் "இன்றைய தினம்

18-ஆம் தேதி புதன்கிழமை; நாளைய தினமும் 18-ஆம் தேதி புதன்கிழமையே" என்றிருந்தது! அமெரிக்காவிலிருந்து ஜப்பானுக்கு வரும் பொழுதோ, கப்பலில் பின்வருமாறு நோட்டீஸ் இருக்கும்: "இன்று தினம் 18-ஆம் தேதி புதன்கிழமை; நாளைய தினம் 20-ஆம் தேதி வெள்ளிக்கிழமை!"

இந்த ஒருநாள் லாபம் எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை. வசதியில்லாத சிறிய கப்பலில் ஒருநாள் அதிகமாகப் பிரயாணம் செய்ய, யார்தான் விரும்புவார்கள்?

ஹொனலுலுவை அடைந்தபோது, எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சிக் குறி காணப்பட்டது. பன்னிரண்டு நாள் தொடர்ச்சியாகக் கப்பலில் பிரயாணம் செய்துவிட்டு, கரையில் இறங்குவதென்றால் - அதிலும் ஹொனலுலுவில் இறங்குவதென்றால் - எவ்வளவு சந்தோஷம்!

அழகான நகரம் ஹொனலுலு. எங்கே பார்த்தாலும், பசுமையான புல் தரைகள். வீதிகள் மிகச் சுத்தமாக இருக்கும். இரவிலே நீல நிற வெளிச்சம். நாகரீகமான தியேட்டர்கள்.

அழகான மோட்டார்கள். கவர்ச்சி மிக்க வியா பார நிலையங்கள். சுவை நிறைந்த பல நாட்டு உணவுகள். உலகப் பிரசித்தி பெற்ற ஹாவாய் தேசத்து மங்கையர்கள், மலர் மாலைகளணிந்து, ஹுலா - ஹுலா நடனம் செய்யும் அற்புதக் காட்சிகள். யாத்ரிகர்களுக்கு ஹொனலுலு ஒரு சுவர்க்கம் போன்றது. நான்கு மைல் நீளமுள்ள வைக்கிக்கி கடற்கரையிலே, அரண் மனை போன்ற பல ஹோட்டல்கள் இருக் கின்றன.

ஹொனலுலுவைச் சேர்ந்த ஒரு அமெரிக் கப் பெண், கப்பலில் எங்களுடன் பிரயாணம் செய்தாள். அவள், தன்னுடைய மோட்டா ரிலே எங்களில் சிலரை அழைத்துக்கொண்டு, ஹொனலுலுத் தீவு முழுவதையும் சுற்றிக் காண்பித்தாள். வழியெல்லாம் இளநீர், அன் னுசிப் பழம் முதலியவைகளைச் சாப்பிட்டுக் கொண்டே சென்றோம்.

ஹொனலுலுவில் முக்கியமாகப் பார்க்க வேண்டியவை மூன்று. முதலாவது, பிஷப் மியூசியம் ; இரண்டாவது, மோர்மன் ஆலயம் ; மூன்றாவது, 'வைக்கிக்கி தியேட்டர்.'

பிஷப் மியூசியம் பிரசித்தி பெற்றதொரு பொருட்காட்சிச் சாலை. ஹாவாய்த் தீவுகளின் படிப்படியான முன்னேற்றத்தை, இது நன்கு விளக்கும்.

மோர்மன் என்ற மதத்தினர் இங்கே இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் வெள்ளையர்களே. இவர்களுடைய மிக அழகிய ஆலயம் ஹொனலுலு நகரில் அமைக்கப் பெற்றிருக்கிறது. இது முற்றிலும் சலவைக் கல்லால் அமைந்த கட்டிடம். அழகிலே நமது தாஜ் மஹாலுக்குஅடுத்தபடியாக, இதைக் கூறலாம்.

'வைக்கிக்கி தியேட்டர்' உலகிற் சிறந்த தியேட்டர்களில் ஒன்று. சென்னையில் நாம் இன்னும் தகரக் கொட்டகைகளில்தான் சினிமாப் பார்த்துக்கொண் டிருக்கிறோம். ஆனால், 'வைக்கிக்கி' நமது தகரக் கொட்டகைகளைப் போன்றதல்ல. அது நாகரீக வசதிகளோடு மிக அற்புதமாக அமைக்கப் பெற்றிருக்கிறது. தியேட்டருக்கு உள்ளே இருந்த போதிலும், வெட்ட வெளியில் இருப்பது போலவே தோன்றும். உண்மையான மரங்கள் ஹாலின் இருபுறங்களிலு மிருக்கின்றன. கூரையை நோக்

கினல், நீல நிறமுள்ள ஆகாயம். அதில் மேகங் கள் நகர்ந்த வண்ணமாய் இருக்கும்; நட்சத் திரங்களும் பிரகாசிக்கும். உண்மையான ஆகா யம் மப்பும் மந்தாரமுமாய் இருந்தாலும், இந்தச் செயற்கை ஆகாயம் எப்பொழுதும் பிரகாசமா யிருக்கும். ஹொனலுலுவை விட்டுக் கப்பல் புறப்படும்பொழுது, துறைமுகத்தில் நூற்றுக் கணக்கான அழகிய இளம் ஹாவாய்ப் பெண் கள் நடனமாடுவார்கள்; கப்பலுக்குச் செல் லும் பிரயாணிகளின் கழுத்தில் மலர் மாலைகளை யணிவித்து, பிரயாணிகள் கொடுக்கும் பரிசுத் தொகைகளை, அந்தப் பெண்கள் பெற்றுக் கொள்வார்கள்.

துறைமுகத்தை விட்டு எங்கள் கப்பல் சிறிது நகர்ந்ததும், வேலைக்காரன் ஒருவன் என்னிடம் ஓடி வந்து, "மாலையை இங்கேயே சமுத்திரத்தில் எறிந்து விடுங்கள்" என்ருன். "ஏன்?" என்று கேட்டதற்கு, அவன் "அது இந்த நாட்டு வழக்கம். நீங்கள் மறுபடியும் ஹொனலுலுவுக்கு வர வேண்டுமென்று எண் ணினல், மாலையை உடனே எறிந்து விடுங் கள்" என்ருன். அவனுடைய மூட நம்பிக்

கையைக் குறித்து, நான் நகைத்தேன். ஆனால், கப்பலில் இருந்த எல்லோரும் தங்கள் தங்கள் மாலைகளைச் சமுத்திரத்தில் எறி வதைப் பார்த்தபொழுது, நானும் எனது மாலையை உடனே எறிந்து விட்டேன். இதற்குக் காரணம் மூட நம்பிக்கை மட்டுமல்ல; ஹொனலுலுவை மறுபடியும் பார்க்க வேண்டு மென்ற ஆசையுங்கூடத்தான். ஹில்லோ என் பது ஹாவாய்த் தீவுகளில் மற்றொரு நகரம். ஹொனலுலுவிலிருந்து இது சுமார் 200 மைல் தூரம்; மிகச் சில கப்பல்கள்தான் இங்கே வரு வது வழக்கம். எங்கள் கப்பல் இங்கேயும் நின் றது. ஹில்லோவுக்கு ஒவ்வொரு கப்பல் வரும் நாளும் ஓர் உற்சவம் போல இருக்கும். கப்பல் வந்தால்தானே வியாபாரம்?

ஹில்லோவிலிருந்து சுமார் 40 மைல் தூரத் தில் பல கந்தக ஊற்றுக்கள் இருக்கின்றன. சில சமயங்களில் இந்த ஊற்றுக்கள் 30 அல்லது 40 அடி உயரம்வரை கிளம்பி, வெள்ளம்போலப் பல மைல்கள் தூரம் பரவி ஓடுமாம்.

மீண்டும் கப்பலில் ஏறியபொழுது, ஹில் லோ துறைமுகத்திலுள்ள அதிகாரியிடம் "இங்

2

தத் தீவில் விசேஷமானது என்ன?'' என்று கேட்டேன். அதற்கு அவன் "எங்கள் ஊரில் பாம்பு என்ற பேச்சே கிடையாது. ஒருவரும் பாம்பைப் பார்த்ததே இல்லை. இதுதான் இந் தத் தீவின் விசேஷம்'' என்றான்.

கப்பல், சான் பிரான்ஸிஸ்கோ துறைமுகத்தை யடைந்தது. கரைக்குச் சென்று கோதாராம் சானன் என்ற இந்திய வியாபாரியைச் சந்தித் தேன். ஸ்ரீ சானன் ஒரு பஞ்சாபி; தேசீய வாதி; மிகவும் வயதானவர். பல வருடங்களாக வியாபாரம் செய்கிறார். சான் பிரான்ஸிஸ்கோ வுக்குச் செல்லும் எந்த இந்தியரும், இவரைச் சந்திக்காமலிருக்க முடியாது. ஸ்ரீ சானன் என்னை அன்போடு வரவேற்று, இந்திய உணவு அளித்தார்.

அன்றிரவே கப்பலுக்குச் சென்றுவிட் டேன். நான் எடுத்திருந்த டிக்கட் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்துக்கு; அந்த நகரத்துக்கு 23 மைல் தூரத்திலுள்ள சான் பெட்ரோதான் துறை முகம்.

யோகஹமாவிலிருந்து புறப்பட்ட 27-ஆவது நாள், சான்பெட்ரோவை அடைந்தேன்.

எல்லோரும் கரையில் இறங்கி விட்டார்கள். ஆனால்,என்னை மட்டும், இமிகிரேஷன் அதிகாரி லேசில் விடவில்லை; சரமாரியான கேள்விகள் கேட்டார். அமெரிக்கா செல்லும் ஒவ்வொரு யாத்ரீகரும் குறைந்தது 500 டாலர் கொண்டு போகவேண்டும். என்னிடம் 497 டாலர் தான் இருந்தது. இதைக் காரணமாக வைத்துக் கொண்டு, சிறிது நேரங் கடத்தினர். கடைசியாக, நான் ஒரு சீக்கியன் அல்ல என்று நிச்சயமாகத் தெரிந்த பிறகுதான், அந்த நாட்டில் இறங்க, எனக்கு அவர் அனுமதி யளித்தார்.

சாமான்களை யெல்லாம் துறை முகத்திலேயே வைத்து விட்டு, கையில் ஒரு சிறு பெட்டியுடன் லாஸ் ஏஞ்சல்ஸ் ஒய். எம். சி. ஏ. கட்டிடத்துக்குச் சென்றேன். முதலில், இடம் கிடையாதென மறுத்தார்கள். பிறகு, நான் ஒரு இந்தியன் என்று தெரிந்ததும், காரியதரிசி வேண்டிய வசதிகள் செய்து கொடுத்தார்.

மறு நாள் ரயிலில் நியூயார்க்குக்குப் புறப்பட்டேன். லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து நியூயார்க்குக்கு, ரயில் மார்க்கமாக, சுமார் 3,200 மைல். அதாவது நியூயார்க்கிலிருந்து லண்ட

னுக்குக் கப்பலில் செல்லும் தூரத்தை விட அதிகம்.

அமெரிக்க ரயில்களில் இரண்டே வகுப்புக்கள்தான் உண்டு. ஒன்று புல்மென் (Pullman); மற்ருென்று கோச். 'புல்மென்' என்பது படுப்பதற்குரிய வசதிகளுடன் கூடியது. 'கோச்' சாதாரணமாக உட்கார்ந்து செல்லும் வசதியுடையது. கோச்சை விட, புல்மெனுக்கு இரட்டிப்புக் கட்டணம். இந்த இரண்டு வகுப்புக்களிலும், லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பவர்களுக்கும் உபயோகியாதவர்களுக்கும் தனித் தனி வண்டிகள் உண்டு.

அமெரிக்காவில், பெரும்பாலான ரயில்களில், இஷ்டப்படி குளிர்ச்சியும் வெப்பமும் தரக்கூடிய கருவிகள் (Air-conditioning and Central-heating) அமைக்கப் பெற்றிருக்கின்றன. மணிக்கு 60 மைல் முதல் 100 மைல் வேகம் வரை, ரயில் வண்டிகள் செல்கின்றன. சில ரயில்களில் குளிப்பதற்கு வசதிகள் உண்டு. பல ரயில்களில் ரேடியோவும் கேட்கலாம். ரயிலில் கோச் வண்டியில் பிரயாணம் செய்வதற்கு மைலுக்கு ஒன்றரை செண்ட்

ஆகிறது; அதாவது, சுமார் முக்காலணு. நமது நாட்டில் இரண்டாவது வகுப்புக்கு வசூலிக்கப்படும் கட்டணத்தை விடச் சிறிது குறைவு.

கலிபோர்னியாவில் வருட முழுவதும் சூரியனைப் பார்க்கலாம். சாதாரணமாக, பனி விழுவதேயில்லை. நான் சென்றிருந்த வருடத்தில், அபூர்வமாக எங்கும் பனி விழுந்து தரையெல்லாம் மூடப்பட்டிருந்தது. கலிபோர்னியாவில் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் ஆரஞ்சு பயிரிடுகிறார்கள். பனியினால் பழங்கள் கெட்டு விடும் என்பதற்காக, பல்லாயிரக்கணக்கான தீப் பந்தங்களைக் கொளுத்தி, தோட்டங்களில் வைத்திருந்தார்கள். ரயிலில் செல்லும்போது, பல மைல் தூரம் வரை; இந்த அபூர்வமான காட்சி தென்பட்டது.

வழியில் டல்லஸ் என்ற ஊரிலுள்ள ரயில்வே ஸ்டேஷனின் உணவுச் சாலைக்குச் சாப்பிடச் சென்றபொழுது, என்னை நீக்ரோக்களுடன் உட்கார வைத்தார்கள். கால் மணி நேரம் வரை எனக்கு உணவளிக்கவில்லை. மானேஜரிடம் விஷயத்தைக் கூறினேன். நான் இந்தி

யன் என்று தெரிந்ததும், அவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, தமது அறையிலேயே எனக்கு உணவு பரிமாற ஏற்பாடு செய்தார். நான் உணவருந்தும்வரை, ரயில் வண்டியை நிறுத்தி வைக்குமாறும் ரயில்வே கார்டிடம் கூறினார்.

மூன்றாவது நாள், ரயில் சிக்காக்கோவை அடைந்தது. அந்த ஊரில் இறங்கியதும், சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோப் பிரசங்கம்தான் எனது ஞாபகத்துக்கு வந்தது. சில மணி நேரத்தில் ஊரைச் சுற்றிப் பார்த்து விட்டு, அன்றைய தினமே நியூயார்க்குக்குப் புறப்பட்டேன்.

3. நியூயார்க் நகரம்

நியூயார்க் நகரத்தில் பென்ஸில்வேனியா என்ற ரயில்வே ஸ்டேஷனில் இறங்கி னேன். பெரும்பாலான ரயில்வே ஸ்டேஷன் கள் பூமிக்குக் கீழே இருக்கின்றன. வழக்கம் போலச் சாமான்களை ரயில்வே ஸ்டேஷனில் வைத்துவிட்டு, வெளியில் வந்தேன். அது 33-ஆவது வீதி.

நான் செல்ல வேண்டிய பள்ளிக்கூடமும் அதே வீதியில் இருந்தது. அங்கே சென்று, பிரின்சிபாலைச் சந்தித்து, என்னை நானே அறி முகப்படுத்திக் கொண்டேன். "இந்த ஊரில் எந்த இடத்தில் தங்குவது சிக்கனமாகவும் சௌகரியமாகவும் இருக்கும்?" என்று அவ ரைக் கேட்டேன். அவரது முகம் சிறிது மாறு தல் அடைந்தது: "இந்த நாட்டில் நிற வித்தியா சம் இன்னும் இருக்கிறதென்பதை அறிவீர் கள். ஒய். எம். சி. ஏ. யில், உங்களுக்கு இடம் கிடைக்கலாம். ஆனால், அங்கே தங்கும் மற்ற வர்கள், உங்களை ஒருவேளை கேவலமாக நடத்தி

ளுலும் நடத்தக்கூடும். எனவே, நீங்கள் 125-ஆவது வீதியில், ஆற்றங்கரையில் அமைந்துள்ள 'இன்டர்நாஷனல் ஹவுஸ்' என்னும் மாணவர் விடுதிக்குச் செல்லுங்கள்" என்ருர்.

பூமிக்குக் கீழுள்ள ரயில்வே நிலையத்துக்குச் சென்றேன். இதற்கு அமெரிக்காவில் 'ஸப் வே' (Sub way) என்று பெயர். நிமிஷத்துக்கு நிமிஷம் பல திக்குகளிலும் வண்டிகள் ஓடிக்கொண்டே யிருந்தன. கூட்டம் தாங்க முடியாத அளவிருந்தது. மிகவும் கஷ்டத்தோடு ஒரு ரயிலில் ஏறினேன். 125-ஆவது வீதியின் ரயில்வே ஸ்டேஷன் வந்ததும், இறங்கி 500-ஆவது நம்பர் வீட்டுக்குச் சென்றேன். (இன்டர் நாஷனல் ஹவுஸின் நம்பர் 500.) ஆற்றங்கரையைக் காணவில்லை. எனக்கோ சந்தேகம். இருந்தாலும், தைரியமாக அந்த வீட்டுக்குள் நுழைந்து, இரண்டு மாடிகளில் ஏறினேன். 'அனுவசியமாக இந்தத் தாழ்வாரத்தில் யாரும் உலாவக்கூடாது' என்று அங்கே ஒரு போர்டு போட்டிருந்தது. முப்பது நாற்பது தடியர்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். அவர்களின் முகங்களெல்லாம் ஒரு மாதிரியாக

இருந்தன. அவர்களில் ஒருவன் என்னிடம் வந்து, வலியக் கைகுலுக்கினான். பிறகு, எனது சட்டைப் பையிலிருந்த சமாசாரப் பத்திரிகையை எடுத்துக் கொண்டு, "தம்பீ, சீட்டாடலாம் வருகிறாயா?" என்றான். "சற்றுப் பொறுங்கள், இதோ வருகிறேன்" என்று கூறிவிட்டு, ஒரே ஓட்டமாகக் கீழே இறங்கினேன்.

வீதிக்கு வந்த பின்னரும்கூட, நெஞ்சு பட படவென்று அடித்துக் கொண்டிருந்தது. 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்றாகிவிட்டது. முன்பின் தெரியாத ஊரில் முதலாவது அனுபவம் எப்படி?

பிறகு, ஒரு விதமாகத் தேடி யலைந்து, இன்டர்நாஷனல் ஹவுஸுக்குச் சென்றேன். ராக்பெல்லர் என்பது உலகறிந்த பெயர். இந்த வள்ளல், கோடி ரூபாய் செலவில், இன்டர்நாஷனல் ஹவுஸ் என்ற மாணவர் விடுதியை அமைத்திருக்கிறார். இங்கே 52 தேசங்களைச் சேர்ந்த 300 மாணவர்களும் 300 மாணவிகளும் வசிக்கிறார்கள். அவர்கள் நியூயார்க் நகரில் 64 பள்ளிக்கூடங்களுக்குச் செல்கிறார்கள்.

இன்டர்நாஷனல் ஹவுஸ் கட்டப்பெற்ற கதை மிகவும் ரஸமானது. இதே இடத்தில் முன்பு காஸ்மபாலிட்டன் கிளப் என்றொரு சங்கம் இருந்தது. அதில் கொலம்பியா சர்வகலாசாலை யின் ஆசிரியர்களில் பெரும்பாலோர் அங்கத் தினர்கள். சங்கத்தின் தலைவரான ஓர் ஆசிரியர், தமது சர்வகலாசாலையில் படித்துக்கொண் டிருந்த ஒரு சீன மாணவனைப் பார்த்து, "ஏனப்பா, நீ இந்த ஊரில் சௌக்கியமா யிருக் கிறாயா?" என்று கேட்டார். அதற்கு அந்த மாணவன் "சௌக்கியத்துக்குக் குறைவில்லை. ஆனால், தங்குவதற்குத்தான் இடம் கிடைக்க வில்லை. எந்த வீட்டுக்குச் சென்றாலும் எனது முகத்தைப் பார்த்தவுடன், 'அறை இல்லை' என்று கதவை மூடி விடுகிறார்கள்" என்றான். அந்நாட்களில், இம்மாதிரி, நூற்றுக்கணக்கான அந்நிய நாட்டு மாணவர்கள் அவதி யுற்றார்கள். காஸ்மபாலிட்டன் கிளப் தலைவர், இதற்கு ஒரு வழி கண்டு பிடிக்கத் தலைப்பட்டார். ஒரு நாள் காஸ்மபாலிட்டன் கிளப்பில் ஒரு விருந் துக்கு ஏற்பாடு செய்தார். ராக்பெல்லரையும் அந்த விருந்துக்கு அழைத்தார். விருந்து

நடந்த அதே ஹாலில் ஒரு பிளான் எழுதிக் கண்ணாடி போட்டு மாட்டப் பெற்றிருந்தது. ராக்பெல்லர் அதைக் கவனித்தார். "இது என்ன ?" என்று கேட்டார். உடனே, காஸ்ம பாலிடன் கிளப் தலைவர், இதுதான் சமயமென் றெண்ணி, இன்டர்நாஷனல் ஹவுஸ் ஒன்று கட்டுவதற்குக் கோடி ரூபாய் ஆகுமென்றும், அதனால் உண்டாகும் பயன்கள் இன்னின்ன வென்றும், ராக்பெல்லருக்கு, விளக்கிக் கூறினார். இன்டர்நாஷனல் ஹவுஸைத் தமது சொந்தச் செலவில் கட்டுவதற்குச் சம்மதம் தர வேண்டும் என்று, மறுநாட்காலை, ராக்பெல்லரிட மிருந்து, காஸ்மபாலிட்டன் தலைவருக்கு, ஒரு கடிதம் வந்தது. தாம் சம்மதம் தர முடியா தென்றும், கமிட்டியின்முன் இந்த விஷயத்தை வைத்து முடிவு சொல்வதாகவும், காஸ்மபாலிட் டன் கிளப் தலைவர் பதில் அனுப்பினார். பிறகு, ராக்பெல்லர், தாமே நேராக அந்தத் தலைவர் வீட்டுக்குச் சென்று, இந்தத் தர்மம் செய்யும் பாக்கியத்தைத் தமக்கு அளிக்க வேண்டு மென்று வேண்டிக் கொண்டாராம். இப்பொ ழுது நியூயார்க், சிக்காகோ, சான் பிரான்

ஸிஸ்கோ (பெர்க்லி), பாரீஸ் ஆகிய நான்கு ஊர்களிலும் இன்டர்நாஷனல் விடுதிகள் இருக்கின்றன.

ஒரு சமயம், நியூயார்க் ஹவுஸுக்கு, ராக்பெல்லரின் குமாரர் வந்தார். டென்னிஸ் கோர்ட்டுகள் வீட்டுக்குள்ளேயே இருப்பதாகவும், வெயிற் காலத்தில் திறந்த வெளியில் டென்னிஸ் ஆட வசதிகள் வேண்டுமென்றும், அவரிடம் சில மாணவர்கள் அப்போது கூறினார்கள். அவரும் அப்படியே செய்வதாக வாக்களித்தார். இன்டர்நாஷனல் ஹவுஸ், 18 மாடிகளுடையது. அடுத்த வீட்டின் மேல் தளத்தை ஏற்பாடு செய்து, இரண்டு டென்னிஸ் கோர்ட்டுகளை, தமது சொந்தச் செலவில் ராக்பெல்லரின் குமாரர் அமைத்துக் கொடுத்தார். இதற்கு இரண்டு லட்ச ரூபாய் செலவாயிற்றாம்.

இந்த வீட்டுக் குள்ளேயே, சிறந்த புத்தகசாலை, வாசகசாலை, 200 பேர் ஒரே காலத்தில் சாப்பிடக்கூடிய சிறந்த உணவுச்சாலை, உடற்பயிற்சிக் கூடங்கள், வியாபார நிலையங்கள் முதலியனவும் மற்றும் பல வசதிகளும் உண்டு.

தினந்தோறும் ஏதாவது கூட்டங்கள் நடந்து கொண்டேயிருக்கும். ஞாயிறுதோறும், மாலை 6 மணிக்கு, அங்கத்தினர்களுக்கு இலவச விருந்து நடக்கும். விருந்துக்குப் பின் சங்கீதம். அதன் பிறகு பிரசங்கம். இந்த வீட்டில் பிரசங்கம் செய்வதற்கு, ஸ்ரீமதி ரூஸ்வெல்ட், பிலிப்பைன் தேசத்துத் தலைவர் கியூஸான், மிஸ் மியூரியல் லெஸ்டர், மீராபென், பிரபல சோஷலிஸ்ட் தலைவர் நார்மன் தாமஸ் முதலியவர்களைப் போன்ற பிரபலஸ்தர்கள் பலரும் வருவது வழக்கம்.

அமெரிக்காவில் பெரும்பாலும் விருந்துப் பேச்சுக்கள்தான் அதிகம். விருந்தில்லா விட்டால், பிரசங்கத்துக்கு அதிகக் கூட்டத்தை எதிர்பார்க்க முடியாது. பிரசங்கியாரையும் வெறுங்கையோடு அமெரிக்கர் அனுப்புவதில்லை. பிரசங்கிகளுக்குக் கொடுக்கும் பணத்தையும் சேர்த்துத்தான், விருந்துக்கு வரும் ஒவ்வொருவரிடமும் விருந்துப் பணம் வசூலிப்பார்கள். விருந்தேயில்லாமல் நடைபெறும் பிரசங்கங்களும் உண்டு. ஹாரல்டு லஸ்கி (Harold Laski) என்ற பிரபல அறிஞரின் பிரசங்கத்தை, நான்

ஒரு நாள் கேட்டேன். அதற்குக் கட்டணம் ஒரு டாலர்.

அமெரிக்க நாணயத்துக்கு டாலர் என்று பெயர். ஒரு டாலருக்கு நூறு செண்டுகள். 1,.5, 10, 25, 50 செண்டுகள் ஆகிய பல காசுகள் உண்டு. சில ஸ்டேட்டுகளில் மட்டும் ஒரு டாலர் வெள்ளிக்காசு இருக்கிறது. பொதுவாக ஒரு டாலருக்குக் கரன்ஸி நோட்டுத்தான் பழக்கத்தி லிருக்கிறது. பத்து செண்டுகளுக்கு டைம் (Dime) என்றும், ஐந்து செண்டுகளுக்கு நிக்கல் என்றும் பெயர். ஒரு நிக்கலுக்கு ஒரு கிளாஸ் ஆரஞ்சுப் பழரசம் சாப்பிடலாம். ஆரஞ்சை அமெரிக்காவின் தேசீயப் பழமென்றே சொல்ல வேண்டும். ஏழை முதல் பணக்காரர்வரை, சகல அமெரிக்கரும் தினந்தோறும் காலையில் ஆரஞ்சுப் பழரசம் அருந்துகிறார்கள்.

ஒரு நிக்கலுக்கு ஒரு கப் காப்பியும் கிடைக்கும். அமெரிக்கர்கள் பெரிய காப்பிக் குடியர்கள். நாள் முழுவதும் காப்பி குடித்துக் கொண்டே யிருப்பார்கள். நியூயார்க் நகரத்தில் எந்த நேரத்திலும் காப்பி கிடைக்கும். சில உணவுச் சாலைகளை இரவு பகல் 24 மணி

நேரமும் திறந்து வைத்திருப்பார்கள். இம் மாதிரியான உணவுச் சாலைகளின் முகப்பில், 'நாங்கள் ஒருபொழுதும் மூடுவதே யில்லை' என்ற பலகை தொங்கும்.

சாதாரண அமெரிக்கத் தொழிலாளி, தின மொன்றுக்கு 8 மணி நேரத்துக்கு மேல் வேலை செய்ய மாட்டான். இம்மாதிரியான உணவுச் சாலைகளில் மூன்று செட் வேலைக்காரர்கள் இருப்பார்கள்.

உணவுச் சாலைகளிலே பல ரகங்களுண்டு. பொதுவாக, அவைகளை மூன்று விதமாகப் பிரிக்கலாம்: (1) அதிக விலையுள்ள உணவுகள் பரிமாறும் முதல்தரமான ஹோட்டல்கள்; (2) வாடிக்கைக்காரர்கள் தாங்களே பரிமாறிக் கொள்ளவேண்டிய **கபேட்டேரியா** (Cafetaria), **ஆட்டோமாட்** (Automat) போன்ற உணவுச் சாலைகள்; (3) டிரக் ஸ்டோர், சாண்ட்விச் ஷாப் போன்ற சிறு கடைகள்.

மிகப் பெரிய பணக்காரர்கள்தான் முதல்தர உணவுச் சாலைகளுக்குச் செல்லுவார்கள். ஒரு வேளைச் சாப்பாட்டுக்கு, பத்து ரூபாய்க்கு மேல் கொடுப்பதற்கு மனம் வரவேண்டு மல்லவா?

மத்திய வகுப்பார் சாப்பிடும் ஹோட்டல் கள்தான் நிறைய இருக்கின்றன. ஒரு கோடி ஜனத்தொகை யுள்ள நியூயார்க் நகரிலே, வீடு களில் அடுப்பு மூட்டுகிறவர்களது தொகை மிகவும் குறைவு. பெரும்பாலோர் தினமொன் றுக்கு ஒரு வேளையாவது ஹோட்டல்களிலே தான் சாப்பிடுவார்கள்.

மத்திய வகுப்பு உணவுச் சாலைகளில் 40 முதல் 75 செண்டுவரை, ஒரு வேளை உணவுக்குச் செலவாகும். வேலைக்காரர்கள் பரிமாறினல், அவர்களுக்கு ஐந்து அல்லது பத்து செண்டு இனும் கொடுக்க வேண்டும். சாப்பிடுபவர்கள் தாங்களே பரிமாறிக் கொள்ளும் உணவுச் சாலை களுக்கு, கபேட்டேரியா என்று பெயர். இந்த ஹோட்டல்களுக்குள் நுழைந்ததும், ஒரு மெஷி னில் டிக்கட் ஒன்று தயாராக இருக்கும். அதை நாம் எடுத்துக் கொண்டதும், மணி யடிக்கும். உடனே, அடுத்த டிக்கட் தானகவே மெஷினில் வந்து நிற்கும்.

அங்கே யிருக்கும் மரப்பலகை (Tray) ஒன்றை எடுத்துக்கொண்டு, கத்தி, 'போர்க்' முதலியவைகளையும் அதில் வைத்துக்கொண்டு,

நமக்கு வேண்டிய உணவுகளைக் கூறவேண்டும். உணவுகள் வரிசையாக வைக்கப்பட்டிருக்கும். அங்குள்ள வேலைக்காரர்கள், நாம் விரும்பிய உணவைக் கொடுத்துவிட்டு, நமது டிக்கட்டில் இவ்வளவு என்று முத்திரை (Punch) போட்டு விடுவார்கள். வெளியில் வரும்பொழுது டிக்கட்டில் காணப்படும் தொகையை நாம் கொடுக்க வேண்டும்.

ஆட்டோமாட் என்பது மற்றொரு வித உணவுச் சாலை. இங்கே உணவுப் பொருள்களைச் சிறிய கண்ணாடிப் பெட்டிகளில் அடைத்து வைத்திருப்பார்கள். குறிப்பிட்ட உணவுகளின் விலை, ஒன்று, இரண்டு அல்லது மூன்று நிக்கல் என்று அந்தந்தப் பெட்டியின்மீது எழுதப்பட்டிருக்கும். குறிப்பிட்ட தொகையைத் துவாரத்தில் போட்டுவிட்டு, அந்தப் பெட்டியின் பொத்தானை அழுத்தினால், கண்ணாடிக் கதவு, தானே திறந்து கொள்ளும். பிறகு, உணவுப் பொருளை நாம் வெளியில் எடுத்துக் கொள்ளலாம்.

காப்பி, டீ, மோர், பழச்சாறு முதலியவைகள் வேண்டுமென்றால், அததற்குத் தனித்தனிக்

குழாய்கள் அமைத்திருக்கிறார்கள். அவைகள் சிறிய தண்ணீர்க் குழாய்களைப் போல் இருக்கும். காப்பியோ, டீயோ அல்லது மோரோ, எது நமக்கு வேண்டுமோ அதற்குரிய குழாயின் அடியில் ஒரு கிளாஸை வைத்துவிட்டு, ஒரு நிக்கலைத் துவாரத்தில் போட்டு, குழாயை அழுத்தினால், நாம் விரும்பிய பானம் ஒரு கிளாஸ் நிறையக் கிடைக்கும்.

நியூயார்க் நகரில் மட்டும், ஒரே ஒருவருக்குச் சொந்தமாக, சுமார் 60 'ஆட்டோமாட்'டுகள் இருக்கின்றன. அவற்றில் தினந்தோறும் இரண்டு லட்சம் பேர்களுக்குமேல் சாப்பிடுகிறார்களாம். பொதுவாக, அதிகப் பணம் கொடுக்க இயலாதவர்கள்தான் 'ஆட்டோமாட்' டுக்குச் செல்லுவார்கள். நான் ஏன் அடிக்கடி 'ஆட்டோமாட்'டுக்குச் செல்கிறேன் என்று, என்னை அமெரிக்க நண்பர் ஒருவர் விசாரித்தார். அதற்கு நான் "இயந்திரங்களுக்கு நிற வித்தியாசம் கிடையாது அல்லவா? அதனால் தான்" என்று பதிலளித்தேன்.

டிரக் ஸ்டோர் (Drug Store) என்பது மருந்துக் கடை. சில மருந்துக் கடைகளில் மருந்து

கள் மட்டிலுமன்றி, வேறு பல பொருள்களும் கிடைக்கும். சாண்ட்விச், முட்டை, காப்பி, கூல் டிரிங் முதலிய சிற்றுண்டிகளும் பானங்களும் அவற்றில் எப்பொழுதும் கிடைக்கும். நியூ யார்க்கில், குறைந்தது வீதிக் கொரு டிரக் ஸ்டோர் உண்டு.

மூலைக்கு மூலை சாண்ட்விச் ஷாப்புகள் இருக் கும். பெரும்பாலான ஷாப்புகளில் உட்காரு வதற்கே இடம் அமைத்திருக்க மாட்டார்கள். அங்கே வருவோர், நின்றுகொண்டும் ஒருவர் மேல் ஒருவர் விழுந்து இடித்துக்கொண்டுந் தான் சாப்பிடுவார்கள்.

நகரின் மத்தியில் மூன்று இந்திய உண வுச் சாலைகள் இருக்கின்றன. 'சிலோன்-இந்தியா', 'ராஜா,' 'பெங்கால் டைகர்' என்று அவைகளின் பெயர்கள்.

வயிறு நிறைய இந்திய உணவு சாப் பிட்டால், குறைந்தது ஏழு ரூபாய் ஆகும். இந்த ஏழு ரூபாயும் ஒரே ஒரு வேளை உணவுக்குத்தான். அப்பளம் ஆறணா, ஒரு கப் ரவா கேசரி முக்கால் ரூபாய் என்றால், பார்த் துக் கொள்ளுங்கள்.

ஸ்ரீ ஜே. எம். குமரப்பாவின் இரு புதல்வி களான லலிதாவும் பிரிதாவும் நியூயார்க்குக்கு வந்தார்கள். இந்தியப் பட்சணம் ஒன்று தயாரிப் பதாக, லலிதா கூறினள். இந்த இரு பெண் களும், நாலைந்து இந்திய மாணவர்களும், நானு மாகச் சேர்ந்து, சுமார் பதினைந்து மைல் தூரத்தி லுள்ள ஒரு அமெரிக்க நண்பரின் வீட்டுக்குச் சென்றோம். நாள் முழுவதும் சிரமப்பட்டுப் பட்சணம் தயாராயிற்று. "என்னம்மா இது, ஒரு புதுமாதிரியாக இருக்கிறதே!" என்றேன். அதற்கு "இதுதான் உருளைக் கிழங்கு போண்டா" என்றாள் அந்தத் திருநெல்வேலித் தமிழ்ப் பெண். காலேஜ் பெண்களைச் சமையல் செய்யச் சொல்லிய குற்றத்துக்காக, நாங்கள் அரைப் பட்டினியாகக் கிடந்து தண்டனை யனுபவித்தோம்.

குறைந்தது நூறு இந்தியர்களாவது நியூ யார்க்கில் இருப்பார்களென்று நினைக்கிறேன். சேக்கர் என்ற இந்திய வியாபாரி பிரபலமான வர். ஹரிதாஸ் மஜூம்தார், அனுப் சிங் போன்ற வர்கள் எப்பொழுதும் ஏதாவது புத்தகங்கள் வெளியிட்டுக்கொண்டே யிருப்பார்கள். கோவிந்த

பீகாரிலால், ‘ஹெர்ஸ்ட் நியூஸ் பேப்பர்’ ஸ்தாபனத்தில், பொறுப்பு வாய்ந்த விஞ்ஞானப் பகுதி ஆசிரியரா யிருக்கிறார். இராம கிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமிகள் ஒருவர், எப்பொழுதும் நியூயார்க்கில் இருப்பார்.

இந்திய வியாபாரக் கமிஷனரின் தலைமைக் காரியாலயம் நியூயார்க்கில்தான் இருக்கிறது. இந்திய ஸ்டேட் ரயில்வேக்களின் ஆபீஸ் ஒன்று நியூயார்க்கில் இருக்கிறது. இதன் ஏஜண்டாக இருந்த ஸ்ரீ சென்னும் அவருடைய மனைவியும் தேசீய நோக்க முள்ளவர்கள். அவர்கள் இந்தியாவைப்பற்றிப் பிரசாரம் செய்தார்கள். இது ரயில்வே அதிகாரிகளுக்குத் பொறுக்க வில்லை. ஸ்ரீ சென்னை விலக்கி விட்டு, அனுபவமில்லாத ஒரு சிறிய ஆங்கிலேய இளைஞனை, அந்த ஸ்தானத்தில் நியமித்தார்கள். அந்த ஆங்கிலேயன் இந்தியாவுக்குச் சென்றதே கிடையாது. ஒருநாள் இந்தியா செல்ல விரும்பிய ஓர் அமெரிக்கர், இந்த ஏஜண்டிடம் சென்று, “தாஜ்மகால் எப்பொழுது கட்டப்பெற்றது?” என்று கேட்டாராம். அதற்கு அந்த ஏஜண்டு “நாலாவது நூற்றாண்

டில்'' என்று பதிலளித்தாராம்! இத்தகைய பிரகஸ்பதிகள்தான், அந்நிய நாடுகளிலே நமது பிரதிநிதிகள்! தகுதிவாய்ந்த ஆயிரக்கணக்கான இந்தியர்கள் நம்மிடையே இருக்கும் பொழுது, விஷயந் தெரியாத ஓர் ஆங்கிலேயனை நமது பிரதிநிதியாக அமெரிக்காவுக்கு அனுப்புவது அநீதி யல்லவா? நாம் அரசியல் அடிமைகளாக இருக்கும் வரை, இத்தகைய அநீதிகள் நடந்து கொண்டேதான் இருக்கும்.

நியூயார்க்கிலுள்ள இந்திய சமூகத்தில் ஒற்றுமை கிடையாது. பெரும்பாலோர் எங்கே வசிக்கிறார்கள் என்ற விஷயமே தெரியாது. ஏதாவது விருந்துகளிலே சந்தித்தால்தான் உண்டு.

அமெரிக்கர்களுக்கு, கை ரேகை பார்த்துக் கொள்வதில் மிக ஆர்வம். சில இந்தியர்கள் அந்த நாட்டில் கை ரேகை பார்ப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். மாணவர்களும் யாத்திரை வாசிகளும்தான், நாம் அடிக்கடி சந்திக்கக் கூடிய இந்தியர்கள்.

உதய சங்கருக்கு அமெரிக்காவில் நல்ல மதிப்பு. ஒரு முறை அவர் நடனமாடி விட்டு உள்ளே சென்றபொழுது, ஜனங்கள் பதினேழு முறை, கரகோஷம் செய்து, அவரை மீண்டும் அதே நடனம் ஆடும்படி செய்தார்களாம். பிரபலமான கார்னிகி ஹாலிலே, 14 மாதங்களுக்கப்புறம் நடைபெறப் போகும் உதய சங்கர் நடனத்துக்கு, இப்பொழுதே டிக்கட்டுகள் விற்க ஆரம்பித்து விடுவார்கள்.

நியூயார்க்குக்கு வரும் இந்தியர்களிலே, பெரும்பாலான முட்டாள்கள் நமது ராஜாக்கள்தான். ஒரு ராஜா நியூயார்க்கில் 2 லட்சம் டாலருக்கு வைரமும், 42 மோட்டார்க் கார்களும் வாங்கினாராம்.

நகரின் மத்தியில் பூமிக்குக் கீழே கேளிக்கைக் கிளப்புகள் பல இருக்கின்றன. அங்கே பெண்கள் நிர்வாணமாகப் பரிமாறுவார்களாம் இந்த இடங்களுக்குத்தான் நமது ராஜாக்கள் செல்வார்களாம். இப்படி ஒரு ராஜா சென்றபொழுது, அங்குள்ள சில போக்கிரிகள் அவரை உள்ளேயே அடைத்து வைத்துக் கொண்டு, " ஐயாயிரம் டாலர் கொடுத்தால்தான்

வெளியில் விடுவோம்'' என்று கூறிவிட்டார் களாம். வேறு வழியில்லாமல் ராஜா பணத் தைக் கொடுத்தார். ராஜாவிடம் பணத்தைத் தவிர, வேறே என்ன இருக்கிறது ?

---

4. வாழ்க்கை வசதிகள்

ஒரு நாள் 'கரண்ட் ஹிஸ்டரி' (Current History) பத்திரிகையின் ஆசிரியர் இன்டர் நாஷனல் ஹவுஸுக்கு வந்தார். ரேடியோவில் பேச இந்திய மாணவன் ஒருவன் வேண்டு மென்று தேடிக்கொண் டிருந்தார். அவர் கண்ணில், நான்தான் முதன் முதலில் தென் பட்டேனும். எனவே, எனக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது. டபிள்யூ. எச். என். (W. H. N). என்ற சிறிய ரேடியோ ஸ்டேஷனில் பேசினேன். மொத்தம் ஐந்து நிமிஷம். அதிலே அவருடைய கேள்விகளுக்கு இரண்டு நிமிஷம் ஆகிவிட்டது; எனது பதிலுக்கு மூன்றே நிமிஷந்தான். கேள்விகள் எவை பற்றித் தெரியுமா? இந்தியாவிலுள்ள ஜாதி கள், ஹரிஜனங்கள், பாஷைகள், சினிமாக்கள், இந்தியப் பெண்கள், கடைசியாக மகாத்மா காந்தி- இவைபற்றித்தான். அந்த மூன்று நிமிஷப் பதி லுக்கு நான் பெற்ற சன்மானம் 25 டாலரும் ஒரு வேளை விருந்தும். எனது புரோகிராம் முடிந்

தரும் நடந்த அடுத்த புரோகிராம் மாணவர்களுடையது. இரண்டு சர்வகலாசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்குள் போட்டி. முதலாவது கேள்வி: 'இந்தியாவின் தலைநகர் எது?' என்பதுதான். நியூயார்க் சர்வகலாசாலை மாணவன் ஒருவன் "கல்கத்தா" என்று பதிலளித்தான்!

அமெரிக்காவிலே **என். பி. ஸி.** (N. B. C.) தான் மிகப் பெரிய ரேடியோ. இங்கே பல புரோகிராம்களுக்குச் சென்றிருக்கிறேன். இது **ராக்பெல்லர் ஸென்டரிலே** அமைக்கப் பெற்றிருக்கிறது. ஏராளமான தியேட்டர்கள் இங்கே இருக்கின்றன. ஒவ்வொரு தியேட்டரிலும் ஆயிரத்துக் கதிகமான மக்கள் உட்காரலாம்.

நமது நாட்டில் ரேடியோவை, அரசாங்கத்தாரே வைத்துக்கொண்டு, முக்கியமாகத் தங்கள் பிரசாரத்துக்குப் பயன்படும் கருவியாகவே அதை உபயோகிக்கிறார்கள். ஆனால், அமெரிக்காவில் ரேடியோ ஸ்டேஷன்கள் வியாபார முறையில் நடத்தப் படுகின்றன. தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான எத்தனையோ ஸ்டேஷன்கள் இருக்கின்றன. இந்த

ரேடியோ நிலையங்களில் ஒன்றை உபயோகித்துக் கொள்ள, மணிக்கு இவ்வளவு என்று கட்டணம் உண்டு. நல்ல ஸ்டேஷன்களில், வாரத்துக்குச் சில தடவை, இரண்டு அல்லது மூன்று மணி நேரத்தை, பெரிய வியாபாரிகள் விலைக்கு வாங்கிக் கொள்வார்கள். பிரசித்தி பெற்ற பாடகர்களையும், வாத்தியக் கோஷ்டிகளையும் தங்கள் செலவில் ஏற்பாடு செய்வார்கள். அவர்களுடைய கச்சேரியின் இடையிடையே, தங்கள் சாமான்களைப்பற்றி, இவர்கள் விளம்பரம் செய்வார்கள்.

தேர்தல் காலங்களில், அபேட்சகர்களோ அல்லது அபேட்சகர்களை நிறுத்தி யிருக்கும் கட்சியினரோ, ரேடியோ நேரத்தை விலைக்கு வாங்கி, தேர்தல் பிரசாரம் புரிவார்கள்.

எங்கே பார்த்தாலும் ரேடியோக்கள் ; வீடு தவறாமல், கடைகள் தவறாமல் ரேடியோக்கள் ; மோட்டார்களில், ரயில்வேக்களில் ரேடியோக்கள். இந்த நாட்டிலே ரேடியோக்களின் விலை மிகக் குறைவு.

நகரில் ஊருக்குள்ளேயே பல மைல் தூரம் வரை ரயில்கள் ஓடுகின்றன. அவைகளில்

இரண்டு விதமுண்டு: பூமிக்குக் கீழே ஓடும் ரயில்கள்; வீதிகளுக்கு மேலே பாலம் போட்டு அந்தப் பாலத்தின்மீது ஓடும் ரயில்கள். எந்த இடத்துக்குச் சென்றாலும், ஒரு நிக்கல்தான் கட்டணம். சில சமயங்களில் ஒரு நிக்கலுக்கு 20 மைல் தூரம் வரை பிரயாணம் செய்யலாம்.

இந்த ரயில்களில், துரிதமான சில வண்டிகள் மணிக்கு 60 மைல் செல்லும். வெளியிலிருந்து டவுனுக்கு வருபவர்கள், தங்கள் மோட்டார்களை நூறு வீதிகளுக்கு அப்பால் நிறுத்திப் பூட்டிவிட்டு, ரயில்களில்தான் வருவார்கள். இதற்குக் காரணம் இரண்டு: முதலாவது, ரயில் 15 நிமிஷத்தில் டவுனை அடைந்துவிடும்; மோட்டாரில் சென்றால், குறைந்தது அரை மணியாவது ஆகும். இரண்டாவது, மோட்டாரை டவுனில் நிறுத்த, இடம் கிடைக்காது; அப்படி இடங் கிடைத்தாலும், மணிக்கு முக்கால் ரூபாய் முதல் ஒன்றேகால் ரூபாய் வரை வாடகை கொடுக்கவேண்டும்.

டிராம் வண்டிகளும் பஸ்களும் நியூயார்க்கில் நிறைய இருக்கின்றன. டிராம் வண்டிகளை விட பஸ்களுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

ரிக்ஷா என்ற பேச்சே அங்கே கிடையாது. குதிரை வண்டிகளை யெல்லாம் பொருட்காட்சிச் சாலையில் வைத்திருக்கிறார்கள். ஆனால், ஸென்ட்ரல் பார்க்கில் மட்டும் சில குதிரை வண்டிகள் இருக்கின்றன. உல்லாசப் பிரயாணம் செய்வோர்தான் அவைகளை உபயோகிப்பார்கள். மோட்டார்களைவிட, அந்தக் குதிரை வண்டிகளுக்கு வாடகை இரண்டு மடங்கு அதிகம். இந்த வண்டிகள் ஸென்ட்ரல் பார்க்குக்கு வெளியே செல்ல முடியாது.

மோட்டாருக்கு வாடகை முதல் மைலுக்குப் பத்தணா. பிறகு, ஒவ்வொரு கால் மைலுக்கும் இரண்டரையணா. சாமான்கள் வாங்க, யாரும் மோட்டார்களில் செல்வதில்லை. நாம் மோட்டாரில் சென்று ஒரு கடையில் இறங்கினால், நம் சாமான்களை வாங்கி முடியும் வரை நமது மோட்டார் அடுத்த தெருவின் வழியாகச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டேயிருக்க வேண்டும். ஏனென்றால், பகிரங்க ரஸ்தாவில் அது நிற்கக்கூடாது.

நியூயார்க்கின் முக்கியமான இடத்துக்கு டைம்ஸ் ஸ்கொயர் (Times Square) என்று பெயர்.

அதற்கு அருகிலுள்ள ஐந்தாவது அவென்யூ (Fifth Avenue) என்ற வீதிதான் பிரபலமான தெரு. 102 மாடியுள்ள எம்பையர் ஸ்டேட் கட்டிடம் இந்த வீதியில்தான் இருக்கிறது. எ. எல். ஸ்மித் (A. L. Smith) என்ற ஒருவர் 15 கோடி ரூபாய் செலவில் இதைக் கட்டினுர். இதன் உயரம் 1,248 அடி. இதில் 20 ஆயிரம் ஜனங்கள் வேலை செய்கிறுர்கள். உச்சிக்குச் செல்ல, ஒரு டாலர் கட்டணம். உச்சியிலிருந்து பார்த்தால், சில சமயங்களில், சுமார் 20 மைல் சுற்றளவு வரை காட்சிகள் தென்படும்.

கிரைஸ்லர், உல்வோர்த் போன்ற பெரிய கட்டிடங்களும் இங்கேதான் இருக்கின்றன. ராக்பெல்லர் சென்டர் என்ற 14 கட்டிடங்களும் இங்கிருக்கின்றன. 50, 60, 70 மாடிகளுள்ள கட்டிடங்கள் இந்நகரில் சர்வ சாதாரணம்.

ஒன்பது கோடி ரூபாய் செலவில் கட்டப்பெற்ற நியூயார்க் பப்ளிக் லைப்ரரி இந்த வீதியில் இருக்கிறது. சுமார் 25 லட்சம் புத்தகங்கள் கொண்ட இந்த லைப்ரரியில், 100 தமிழ்ப் புத்தகங்கள்தான் இருக்கின்றன. அவற்றிலும் பெரும்பாலானவை கிறிஸ்துவர்கள் எழுதி

யவை. நான் அங்கே விரைவில் படித்த முத லாவது தமிழ்ப் புத்தகம் ஆறுமுக நாவலரின் பால பாடம்.

ஆயிரக்கணக்கான பத்திரிகைகள் அங்கே வருகின்றன. அவற்றில் நமது 'ஹிந்து'வும் ஒன்று. டைம்ஸ் ஸ்கொயரிலுள்ள பத்திரிகைக் கடைகளில் 'ஹிந்து' வாரப் பத்திரிகை விலைக் குக் கிடைக்கும். நியூயார்க்கில் தினசரிப் பத் திரிகைகள் இரவு 12 மணிக்குத்தான் வெளி யாகின்றன. ஒரு பத்திரிகையின் விலை இரண்டு செண்டு. சில பத்திரிகைகள் மூன்று செண்டு. சில தினப் பத்திரிகைகளில், ஒரு நாளைக்கு ஒரு பக்கம் விளம்பரம் செய்யக் கட்டணம் 30 ஆயிரம் ரூபாய்க்கு மேலாகும்.

'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையின் ஞாயிற்றுக்கிழமை இதழின் விலை பத்து செண்டு. இந்தப் பதிப்பில் பத்துக்கு மேற்பட்ட பகுதிகள் (Sections) உண்டு. மொத்தம் சுமார் 150 பக்கங்கள் இருக்கும்.

பத்திரிகைகளை அமெரிக்கர்கள் இரவல் வாங்கிப் படிப்பதில்லை. ஒவ்வொருவரும் தங் கள் தங்களுக்கு இஷ்டமான பத்திரிகைகளை

விலைக்கு வாங்கிப் படித்து விட்டு, ரயில்களிலோ, அல்லது வீதிகளிலுள்ள குப்பைத் தொட்டி களிலோ போட்டுவிட்டுச் செல்வார்கள்.

பழைய பத்திரிகைகளையும் பழைய புத்த கங்களையும் விற்கும் கடைகள். பல வுண்டு. சில குறிப்பிட்ட பத்திரிகைகளின் பழைய பிரதி களுக்கு, மிக அதிக விலை கொடுத்தே வாங்க நேரிடும். வியாபார நிலையங்களுக்கு யார் சென் ருலும் ஒரே விலைதான்; பேரம் கிடையாது. பெரிய பெரிய டிபார்மெண்ட் ஸ்டோர்கள் நியூ யார்க்கில் இருக்கின்றன. இவைகளில் மிகப் பெரியது வானு மேக்கர் என்பதுதான். இந்த வியாபார நிலையம் சுமார் 15 மாடிகள் கொண்ட ஒரு கட்டிடத்தில் இருக்கிறது. ஆயிரக்கணக் கான ஜனங்கள் இதில் வேலை செய்கிருர்கள். கோடிக் கணக்கில் வியாபாரம் நடக்கிறது. குண்டுசி முதல் மோட்டார் வரை இங்கே வாங்கலாம்.

உல்வோர்த் (Woolworth) என்ற வியாபார நிலையங்கள், அமெரிக்கா முழுவதிலும் - ஏன், லண்டன், பெர்லின், தென்னுப்பிரிக்கா முத லிய இடங்களிலும் கூட - இருக்கின்றன. அவற்

றில் ஐந்து காசுச் சாமான்களும் பத்துக்காசுச் சாமான்களும்தான் விற்கப்படுகின்றன. மிகச் சில சாமான்கள் மட்டும் 25 அல்லது 50 காசு விலையில் இருக்கும். பெரும்பாலான பிற வியாபார நிலையங்களைப் போலவே, இந்த உல்வொர்த் வியாபார நிலையங்களும், நமக்குச் சௌகரியமான சீதோஷ்ணம் தரக்கூடிய கருவிகள் (Air-condition) அமைக்கப் பெற்றிருக்கின்றன.

வெளியூர்களிலும் சுற்றுப் புறங்களிலுமுள்ளவர்கள், பெரும்பாலும் கடைக்கு வந்து சாமான்கள் வாங்குவதில்லை.

கேட்லாக்கைப் பார்த்துவிட்டுக் கடிதம் எழுதுவார்கள்; அல்லது டெலிபோன் செய்வார்கள். விரும்பிய சாமான்கள் அவர்களுக்கு விரைவில் கிடைத்துவிடும். இதனால், கடைக்குச் செல்வதில் உண்டாகும் சிரமமும் நேரமும் செலவும் குறைகின்றன. சாமான்கள் வாங்குவதற்காக, ஒரு நாளை அமெரிக்கர்கள் தங்கள் நாட்டில் வீணாக்குவதில்லை.

துணிமணிகள் எல்லாம் தயாராகத் தைத்தே வைத்திருப்பார்கள். சாதாரணமாக,

ஒரு சூட் 21 டாலருக்குக் கிடைக்கும். 21 டாலர் விலையுள்ள சூட்டுகளைமட்டில் விற்கும் கடையொன்று இருக்கிறது. இங்கே எப்பொழுதும், எல்லா ரகங்களிலும், ஆயிரக்கணக்கான சூட்டுகள் தயாராக இருக்கும். நாம் தனியாக ஆர்டர் கொடுத்துத் தைக்கும்படி கூறினல், விலை மிக அதிகமாகும்.

அமெரிக்காவில் தொழிலாளர் சங்கங்கள் மிகவும் பலம் வாய்ந்தவை. பெரும்பாலான பெரிய வியாபார ஸ்தலங்கள் தனிப்பட்ட பணக்காரர்களுக்குச் சொந்தமானவை. எனவே, அடிக்கடி வேலை நிறுத்தங்கள் நடக்கும். வேலை நிறுத்த மென்ருல், தொழிலாளர்கள் வேலைக்கு வராமல் இருப்ப தல்ல; தாங்கள் செய்த வேலையை நடைபெருமல் தடுப்பதுதான் அமெரிக்கத் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தம்.

நியூயார்க்கில் ஒரு பெரிய ஹோட்டலில் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தார்கள். ஹோட்டலில் தங்கியிருந்த பிரயாணிகளை எச்சரித்து வெளியே அனுப்பிவிட்டு, ஹோட்டல் கதவை உள்புறமாகத் தாழ்ப் போட்டுக்

கொண்டு, எல்லாத் தொழிலாளரும் ஹோட்ட லுக்குள்ளேயே இருந்தார்கள். இதற்கு 'உட் கார்ந்த வேலைநிறுத்தம்' (Sit-down Strike) என்று பெயர். ஹோட்டல் முதலாளி பார்த் தார். தமது ஹோட்டல் வியாபார நஷ்டத் தோடு மட்டு மல்லாமல், இந்தத் தொழிலாளி கள் உள்ளேயே நாள் கணக்காக உட் கார்ந்துகொண்டு, அங்கேயிருந்த தீனிகளையும் காலி செய்வதைக் கண்டபொழுது, அவரால் தாங்க முடியவில்லை. உடனே தொழிலாள ரின் கோரிக்கைகளுக்கு இணங்கிவிட்டார்.

வியாபாரங்களில் பெரிய மோசம் செய்யும் அயோக்கியர்கள் இந்த நகரிலே உண்டு. அவர் களில் பெரும்பாலோர் வி. பி. கம்பெனி வியா பாரிகள். போலிச் சரக்குகளை அனுப்பி மோசம் செய்வார்கள். அவர்களுக்கு 'போஸ்ட் பாக்ஸ்' (தபால் பெட்டி) ஒன்றுதான் இருக் கும். சிலர் சாமான்களுக்காக முன்பணத் தைப் பெற்றுக்கொண்டு ஓடி விடுவார்கள். தங்கள் உண்மையான பெயரை ஒரு பொழு தும் கூறமாட்டார்கள். தபால் பெட்டியின் நம் பரும் அடிக்கடி மாறிக்கொண்டே யிருக்கும்.

இன்னும் சிலர் முக்கியமான இடங் களிலோ அல்லது பெரிய ஹோட்டல்களிலோ தங்கி, வெளியூர்களிலிருந்து வரும் ஆசாமி களுக்கு ஆசை வார்த்தைகள் கூறி ஏமாற்றி, பணத்தை அடித்துக்கொண்டு போய்விடுவார் கள்.

எடுத்ததற்கெல்லாம் துப்பாக்கியை நீட்டும் கொள்ளைக்காரர்கள் பலரும் ·நியூயார்க்கில் உண்டு. இரவில் ஜனசந்தடி யில்லாத இடங் களிலும், பகலில் ஜன நெருக்கமுள்ள இடங் களிலும், தங்கள் தொழிலை இவர்கள் செய்வார் கள். வீதியில் செல்லும் ஒருவன் கையில் பணம் வைத்திருக்கிறான் என்று தெரிந்தால், அவ னுடனேயே இவர்கள் நடந்து சென்று, ரிவால் வரைக்கொண்டு அவனது இடுப்பில் குத்து வார்களாம். அவன் உடனே பயந்து தன்னிட முள்ள எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு, பேசாமல் போகவேண்டும். இல்லாவிட்டால், இந்தக் கொள்ளைக்காரர்கள் அவனைச் சுட்டு விட்டு மாயமாய் மறைந்து விடுவார்களாம்.

ஒரு நாள் ருஷிய சினிமாப் படம் ஒன்றைப் பார்ப்பதற்காக, நியூயார்க் நகரின் ஒரு மூலையி

லுள்ள ஒரு சினிமாத் தியேட்டருக்கு, நான் சென்றேன். அந்தத் தியேட்டர், ஒரு கட்டிடத்தின் ஐந்தாவது மாடியிலிருந்தது. லிப்ட் (Lift) என்ற விசை ஏணியில் சென்றபொழுது, அதன் வேலைக்காரன் தனது இடுப்பில் இருபுறங்களிலும் ரிவால்வர்கள் வைத்திருந்தான். குறிப்பிட்ட அந்தப் பகுதியில் அடிக்கடி சச்சரவுகள் உண்டாகும். சினிமாவுக்கு வரும் ஜனங்களைப் பாதுகாப்பதற்காகத்தான், அவன் இப்படி ரிவால்வர்களை வைத்திருக்கிறானும்.

நகரின் மத்தியில் மட்டும் சுமார் 200 சினிமாத் தியேட்டர்கள் இருக்கின்றன. இவைகளிலே மிகப் பெரியது ரேடியோ சிட்டி மியூசிக் ஹால்; அதற்கடுத்தது ராக்ஸி. மியூசிக் ஹாலில் 6,500 பேர் உட்காரலாம். அங்கே வாரமொன்றுக்குச் சுமார் 2 லட்சம் ரூபாய் வசூல் ஆகும். 6,500 சீட்டுகளில் எந்த இடத்திலிருந்து பார்த்தாலும், ஸ்டேஜ் முழுவதும் தெரியும். இங்கே ஒரு படமும், ஒரு ஸ்டேஜ் ஷோவும் காண்பிப்பார்கள். இந்தக் கட்டிடம் ஒரு அரண்மனைபோல் இருக்கிறது. எங்கே பார்த்தாலும் வெல்வெட்டும் பளிங்குந்தான். கண்

லுக் கினிய சித்திர வேலைப்பாடுகளும் செய்யப் பட்டிருக்கின்றன. மாலை 4 மணிக்கு அங் கிருக்கும் ஜனங்களுக்கு இலவசமாகத் தேத் தண்ணீர் கொடுக்கிறார்கள்.

சாதாரணமான சினிமாத் தியேட்டர்களில் பகல் 11 மணிக்கு, சினிமா காட்டத் தொடங்குவார்கள். இரவு 11 மணி வரை தொடர்ந்து காண்பிப்பார்கள். ஆனால், ஒரு முழுப் புரோகிராம் நடத்த, மூன்று மணி நேரந் தான் ஆகும்.

சில சினிமாக் கொட்டகைகளில் காலை 8 மணி முதல் இரவு 2 மணி வரையில், படம் காண் பிப்பார்கள்.

எல்லா சினிமாக்களிலும் ஒரே கட்டணம், ஒரே வகுப்புத்தான்; ஆனால், மணி நேரத்துக் குத் தக்கபடி கட்டணம் பெருகும். உதாரண மாக, ஒரு மட்டமான தியேட்டரில் பகல் ஒரு மணி வரை 10 செண்டு; ஒரு மணிக்குமேல் 5 மணி வரை 15 செண்டு; ஐந்து மணிக்கு மேல் 25 செண்டு கட்டணம்.

ரேடியோ சிட்டி மியூசிக் ஹாலில் பகல் ஒரு மணிக்குள் சென்றால், 29 செண்டு; ஒரு மணியி

லிருந்து 5 மணி வரை 90 செண்டு; 5 மணிக்கு மேல் 9 மணிவரை 75 செண்டு; 9 மணிக்கு மேல் 35 செண்டு. விடுமுறை நாட்களில் மாலைக் கட்டணம் 1 டாலர் 25 செண்டு வரை உயரும்.

மிக உயர்ந்த படங்களைப் பழமையான தியேட்டர்களில், தினம் இரு முறை காண்பிப் பார்கள். இதற்குச் 'சாலைக் காட்சி' (Road Show) என்று பெயர். இங்கே பல வகுப்புக்கள் உண்டு. ஐந்தாறு வாரங்களுக்கு முன்னரே டிக்கட் வாங்கினால்தான், இவற்றில் இடங் கிடைக்கும். உயர்ந்த வகுப்புக்குச் சுமார் 8 டாலர் கொடுக்கவேண்டும்.

இவைகளைத் தவிர, செய்திப்படங்கள் காண்பிப்பதற்காகவே பல தியேட்டர்கள் இருக்கின்றன. ஒரு மணி நேரம் செய்திகளை யும் பிற சிறு படங்களையும் இவற்றில் காண் பிப்பார்கள். இவைகளுக்கு 15 முதல் 25 செண்டு வரை கட்டணம்.

பற்பல நாடுகளின் அரசாங்கங்களும்-உதா ரணமாக ரஷ்யா, ஜர்மனி, இத்தாலி முதலிய அரசாங்கங்கள் - தங்கள் பிரசாரத்துக்காகவே, நியூயார்க் நகரில், தியேட்டர்களை, நேர் முக

மாகவோ அல்லது மறைமுகமாகவோ, நடத்துகின்றன. ஒரே நாளில், நியூயார்க் நகரில், சுமார் பதினைந்து பாஷைப் படங்கள் ஆடிக் கொண்டிருக்கும்.

அந்நிய நாட்டுப் படங்களை மட்டும் காண்பிப்பதற்கென்றே, சில சினிமாக் கொட்டகைகள் இருக்கின்றன. இவைகள் பெரும்பாலும் வீடுகளுக்குள்ளேயே அமைக்கப்பெற்றிருக்கும். சுமார் நூறு பேர்தான் இவற்றில் உட்காரலாம். இவைகளுக்குச் சாதாரணமாக 55 செண்டு கட்டணம்.

நாடகக் கொட்டகைகளும் நிறைய உண்டு. சில நாடகங்கள் நான்கு அல்லது ஐந்து வருடங்கள் தொடர்ந்து நடைபெறும். பிறகு, அவைகள் சினிமாப் படங்களாக எடுக்கப்பட்டு வெளிவரும். நிர்வாண நாட்டியங்களுக்கு, 'பர்லெஸ்க்' (Burlesque) என்று பெயர். இந்தத் தியேட்டர்கள், நகரின் மத்தியில் இருக்கின்றன. இந்த நாட்டியங்களால் மின்ஸ்கி (Minsky) சகோதரர்கள் கோடிக் கணக்காகப் பணம் திரட்டி விட்டார்கள். நிர்வாண நாட்டியங்கள், ஒரு அளவை மீறி, மிகக் கேவலமான நிலைமைக்குட்

போய்க்கொண்டிருந்தன. இந்த நாட்டியங்களை நிறுத்த வேண்டுமென்று, அப்பொழுது பாதிரிகள் நாடெங்கும் பலத்த கிளர்ச்சி செய்தார்கள். பர்லெஸ்க்கை (Burlesque) அரசாங்கத்தார் நிறுத்தி விட்டார்கள். ஆனால், மின்ஸ்கி சகோதரர்கள் இதே நிர்வாண நாட்டியத்தை 'பாலீஸ்' (Follies) என்ற மற்றொரு பெயரால் மீண்டும் ஆரம்பித்துவிட்டார்கள். பாதிரிகளால் 'பர்லெஸ்க்' என்ற பெயரைத்தான் தடை செய்ய முடிந்தது. ஆனால், உண்மையான 'பர்லெஸ்க்'கைத் தடை செய்ய முடியவில்லை.

5. நிறத்துவேஷம்

நினைப்பதற்கும் தகுதியற்ற எத்தனையோ ஆபாசங்களும் குற்றங்களும் அக்கிரமங்களும் அமெரிக்காவில் நடைபெறுகின்றன. அவைகளைத் தடுக்காமல் அல்லது தடுக்கச் சக்தியில்லாமல் இருக்கும் கிறிஸ்துவப் பாதிரிகள் கூட்டம்,எதற்காக இந்தியாவுக்கும் மற்ற வெளி நாடுகளுக்கும் வரவேண்டும்? அமெரிக்காவில் இந்தப் பாதிரிகள் இன்னும் பத்துத் தலைமுறைகளுக்கு உழைத்தால்கூட, அவர்களது வேலை முடிவடையாது.

இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குத் திரும்பும் பாதிரிகள் கூட்டத்தார், அமெரிக்காவில் இந்தியாவைக் குறித்து எவ்வளவு கேவலமாகப் பிரசாரம் செய்கிறார்கள் என்பதைக் கூறினால், நீங்கள் நம்பக்கூட மாட்டீர்கள். இந்தியர்கள் காட்டுமிராண்டிகளாம். சிலர் அரை நாகரீகம் உள்ளவர்களாம். சிங்கம், யானை, புலிகள் நிறைந்த காடாம் இந்தியா. இங்கே உள்ள பாதிரிகளின் உயிர் ஒவ்வொரு நிமிஷ

மும் அந்தரத்தில் தொங்கிக்கொண்டே யிருக்கிறதாம். அஞ்ஞானிகளான இந்தியர்களைப் பாதுகாக்க, ஆண்டவன்தான் இந்தப் பாதிரிகளை இந்தியாவுக்கு அனுப்பி யுள்ளானும். இப்படி யெல்லாம் பேசி, தெய்வ பக்தியுள்ள அமெரிக்கர்களிடம் இந்தப் பாதிரிகள் கொள்ளை யடிக்கிருர்கள். இந்தியாவில் ஏதோ சில நல்ல பாதிரிகள் இருக்கலாம். ஆனுல், பொதுவாக வேலையற்ற சோம்பேறிக் கூட்டத்தினரே இங்கே பாதிரிகளாக வருகிருர்கள்.

நியூயார்க் நகரிலே, ஏராளமான சர்ச்சுகள் இருக்கின்றன. சர்ச்சுகளுக்குச் செல்வோரின் தொகை மிகவும் குறைவு. சில சர்ச்சுகளில், கூட்டம் வருவதற்காக, இலவசத் தேனீர் விருந்து அளிக்கிருர்கள். சில சர்ச்சுகளில், டான்ஸ் ஆடுவதற்குக்கூட ஏற்பாடு செய்கிருர்கள். சர்ச்சுகளில் பிரார்த்தனை நடந்தபின், பாதிரிகள் பிரசங்கம் செய்வார்கள். பெரும்பாலும் சமுதாய அல்லது அரசியல் விஷயங்களைப் பற்றித்தான் பேசுவார்கள்.

இப்படிப்பட்ட பிரசங்கிகளில் **ஜான் ஹேனஸ் ஹோம்ஸ்** மிகப் பிரசித்தி பெற்றவர். அவர்

நிறைந்த வாக்கு வன்மை யுடையவர்; அடிமை நாடுகளின் விடுதலையில் ஆர்வம் கொண்டவர்; இந்தியாவுக்கு அமெரிக்காவிலுள்ள நண்பர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர்; காந்திஜியிடம் பேரன்பு கொண்டவர். அமெரிக்காவில் காந்திக் குல்லாய் அணிந்து, இந்தியாவைப்பற்றி இவர் பிரசாரம் செய்திருக்கிறார்.

உலகத்தில் நிறத்திமிர் இருக்கும்வரை சகோதரத்துவமே உண்டாகா தென்பதற்கு, கிறிஸ்துவ வாலிபச் சங்கங்களே (ஒய். எம். சி. ஏ.) உதாரணம். அமெரிக்காவில் வெள்ளையர்களுக்கும் நீக்ரோக்களும் தனித்தனி ஒய். எம். சி. ஏ.க்கள் இருக்கின்றன. ஜப்பானில் ஜப்பானியர்களுக்கும் கொரியர்களுக்கும் தனித்தனி ஒய். எம். சி. ஏ.க்கள். பர்மாவில் வெள்ளையர், பர்மியர், இந்தியர் ஆகியோருக்குத் தனித்தனி ஒய். எம். சி. ஏ.க்கள். இவ்வளவு நிறத்திமிர் கொண்ட கிறிஸ்துவ வாலிபச் சங்கத்தினர், சகோதரத்துவம் பேசுகிறார்கள்; இந்தியாவின் பிரிவுகளையும் ஜாதிகளையும் குறித்துக் கேலிசெய்கிறார்கள்! கண்ணாடி வீட்டுக்குள்ளிருந்து கல்லெறிவது புத்திசாலித்தன மல்ல.

பொதுவாக, அமெரிக்கர்கள் பலனை எதிர்பாராமல் ஒரு காரியத்தையும் செய்யமாட்டார்கள். ஸ்பானிய யுத்தம் நடைபெற்ற பொழுது, ஸ்பானிஷ் குழந்தைகளுக்கு உதவி செய்வதற்காக, நூற்றுக்கணக்கான அழகிய அமெரிக்க இளம் பெண்கள், கொடிகள் விற்றோ அல்லது சிறு படங்கள் விற்றோ பணம் சேர்த்தார்கள். சிறிது காலம் சென்ற பின்னர், இந்தக் கமிட்டியின் அந்தரங்கம் வெளியாயிற்று. வசூல் செய்த அத்தனை பெண்களுக்கும் தினச் சம்பளம் கொடுக்கப்பட்டிருந்தது. கமிட்டியின் அங்கத்தினர்கள் ஆயிரக் கணக்கில் அலவுன்ஸ் எடுத்துக் கொண்டிருந்தார்கள். ஸ்பானிஷ் குழந்தைகளின் உதவிக்காகச் சேகரித்த லட்சக் கணக்கான பணத்தில், ஒன்றுக்குக் கால் விகிதம் கூட ஸ்பெயினுக்கு அனுப்பப்பட வில்லையாம்!

அரசியல் பிரசங்கம் செய்வதையே தொழிலாகக் கொண்ட பலர் அமெரிக்காவில் இருக்கிறார்கள். தேர்தலின்போது இந்தப் பிரசங்கிகளுக்கு ஏலம் நடைபெறும். யார் அதிகத் தொகை கொடுக்கிறார்களோ அந்தக் கட்சியில் இந்தப் பிரசங்கிகள் சேர்ந்து கொள்வார்கள்.

மாடிஸன் ஸ்கோயர் என்பது அமெரிக்காவிலுள்ள பெரிய 'ஸ்டேடியம்'. இங்கே லட்சக் கணக்கான ஜனங்கள் உட்கார வசதி யுண்டு. ஒருமுறை, ரஷ்யத் தலைவர் ட்ராட்ஸ்கி (Trotsky) மெக்ஸிகோவில் தங்கியிருந்த பொழுது, நியூ யார்க் வாசிகளுக்கு ஒரு ரேடியோப் பிரசங்கம் செய்யச் சம்மதித்தார். மாடிஸன் ஸ்கோயரில் லட்சக் கணக்கான ஜனங்கள் கூடியிருந்தனர். ஒலிபரப்பியில் கோளாறோ அல்லது எதிரிகளின் சூழ்ச்சியோ, என்ன நடந்ததோ தெரியவில்லை; ட்ராட்ஸ்கியின் பிரசங்கத்தில் ஒரு வார்த்தைகூடக் கேட்க வில்லை. அத்தனை லட்சம் ஜனங்களும் ஏமாந்து வீடு திரும்பினார்கள்.

நியூயார்க்கிலுள்ள போலீஸ்காரர்கள் மிகவும் நல்லவர்கள். ஏனெனில், அவர்களில் பெரும்பாலோரும் ஐரிஷ்க்காரர்கள். அவர்கள் எப்பொழுதும் இடுப்பில் ரிவால்வர் வைத்திருப்பார்கள்.

நியூயார்க் நகரில் மட்டும் நிறத்துவேஷம் அதிக மில்லை. பொது ஸ்தாபனங்கள் எல்லாம் எல்லோருக்கும் திறந்துவிடப் பட்டிருக்கின்றன. என்றாலும், பெரிய ஹோட்டல்களுக்கு

வெள்ளையரல்லாதவர்கள் சென்றால், சாதாரண மாக இடமில்லையென்றே கூறிவிடுவார்கள். இந்திய மாணவர் ஒருவர், நியூயார்க்கில் நடந்த ரசமான சம்பவமொன்றைக் கூறினார். ஒரு நாள் ஒரு நடுத்தரமான ஹோட்டலுக்கு இவர் சாப்பிடச் சென்றார். அங்கேயிருந்த ஒரு வேலைக்காரன் இவரைக் கேவலமாக உற்று நோக்கி, கவனியாது இருந்துவிட்டான். இவரும் வெளியில் வந்துவிட்டார். பிறகு, ஒரு மணி நேரம் கழித்து, இவர் ஒரு தலைப்பாகையைக் கட்டிக்கொண்டு, அதே ஹோட்டலுக்கு மீண்டும் சென்றார். இவரைக் கண்டதும் ஹோட்டலில் ஒரே பரபரப்பு. இவர் யாரோ ஒரு மகாராஜா என்று நினைத்துக்கொண்டு, பல வேலைக்காரர்கள் ஓடி வந்தனர். மேஜைக்கு உணவு வந்து சேர்ந்ததும், இந்த மாணவர் தமது தலைப்பாகையைக் கழற்றி மேஜைமீது வைத்து, அதற்கு நமஸ்காரம் செய்தார். இதைக் கண்ட வேலைக்காரர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர்களைப் பார்த்து இந்த மாணவர், " ஒரு மணி நேரத்துக்கு முன் இங்கே வந்தேன். நீங்கள் என்னை மதிக்கவில்லை. இப்பொழுது நீங்கள்

என்னை மதிப்பதற்குக் காரணம் இந்தத் தலைப் பாகைதான். ஆகையால், இதற்கு வணக்கம் செலுத்துகிறேன்" என்றார். வேலைக்காரர் கள் வெட்க மடைந்தார்களாம்.

ஒரு முறை ஒரு நண்பரைப் பார்க்கச் சென்றேன். அவர் 21-ஆவது மாடியில் வசித் தார். வீட்டு முகப்பிலுள்ள வேலைக்காரன் ஒரு ஆட்சேபனை செய்தான். முகப்பிலுள்ள லிப்ட் (Lift) வழியாக நான் செல்லக் கூடா தென்றும், நீக்ரோக்களும் வேலைக்காரர்களும் செல்வதற்காக வீட்டின் பின்புறம் அமைக்கப் பட்டிருக்கும் சாமான்கள் தூக்கும் லிப்டில் தான் செல்லவேண்டு மென்றும், அவன் கூறி னான். கீழே யிருந்தவாறே எனது நண்பருக்கு டெலிபோன் செய்தேன். அவர் கீழே வந் தார். நடந்த விஷயங்களைக் கூறினேன். வேலைக்காரன் மன்னிப்புக் கேட்டுக்கொண் டான்.

ஹார்லம் என்பது நீக்ரோக்கள் வசிக்கும் பகுதி. சுமார் 1 லட்சம் நீக்ரோக்கள் அங்கே வசிக்கிறார்கள். அவர்களின் வீடுகளில், பொது வாக அழுக்கும் நாற்றமும் நிறைந்திருக்கும்.

நீக்ரோக்களாலேயே நடிக்கப் பெற்று நீக்ரோவாலேயே டைரக்ட் செய்யப்பட்ட ஒரு நீக்ரோ சினிமாப் படத்தைப் பார்த்தேன். அந்தப் படம் முழுவதும் சங்கீதமயமாய் இருந்தது.

சங்கீதம், விளையாட்டு ஆகியவைகளில் நீக்ரோக்கள் மிகத் தேர்ச்சி பெற்றவர்கள். இவ்விரு துறைகளிலும் அமெரிக்கா அடைந்திருக்கும் புகழுக்கு, முக்கிய காரணம் நீக்ரோக்கள் தான்.

நீக்ரோக்களிடையே ஒற்றுமையும் சுதந்தர மனப்பான்மையும் நாளுக்கு நாள் விருத்தியாகி வருகின்றன. பெயரளவில் மட்டும் இல்லாமல், உண்மையிலேயே தங்கள் உரிமைகளை நீக்ரோக்கள் அனுபவிக்கும் நாள் விரைவில் வந்துவிடுமென்பதில் ஐயமில்லை.

---

6. சுற்றுப் பிரயாணம்

ஒரு நாள் வால்த்தர் என்னிடம் ஓடி வந்தான். "நாங்கள் அடுத்த வாரம், அமெரிக்காவைச் சுற்றிப் பார்க்க, மோட்டாரில் பிரயாண மாவோம். எங்களுக்கு ஒரு போட்டோகிராபர் வேண்டும். நீ படம் பிடிப்பதிலே எங்களுக்கு நம்பிக்கை யுண்டு" என்றான். நான் பதில் சொல்லாமல் சிறிது யோசித்துக் கொண்டிருந் தேன். என்னிடம் பணமில்லை என்ற விஷயம் அவனுக்குத் தெரியும் போலிருக்கிறது. உடனே அவன் "நீ ஒன்றுக்கும் யோசிக்க வேண்டியதில்லை. ஜான் தன்னுடைய புதிய செவர்லட் காரைக் கொண்டு வருகிறான். வாட் மற்றொரு பிரயாணி. நாங்கள் மூவரும் பிர யாணச் செலவை ஈவு செய்து கொள்கிறோம். உனக்குச் சாப்பாட்டுச் செலவு மட்டுந்தான். நீ மோட்டாரில் பிரயாணம் செய்வதற்காக, போட்டோக்கள் எடுத்துக் கொடுத்தால் போது மானது. போட்டோ சம்பந்தமான அத்தனை செலவுகளையும் நாங்களே ஏற்றுக் கொள்

கிறோம்" என்றான். நான் சம்மதித்தேன். உடனே போட்டோ கம்பெனிக்குச் சென்று 25 ரோல் பிலிம் சுருள்கள் வாங்கி வந்தேன்.

ஏழு வாரங்களில் சுமார் 15,000 மைல் பிரயாணம் செய்தோம். எங்கள் பிரயாணத்தில் 24 ஸ்டேட்டுகளுக்குச் சென்றோம். பிரயாணத்தைப் பற்றிக் கூறுவதற்குமுன் பிரயாணிகளைப் பற்றிக் கூறவேண்டும்:

1. ஜான் ஹோயம் 2. வால்த்தர் காஸ்ப்பர் 3. வாட் புளுக்ஹீய்ஸ் - இவர்கள்தான் எனது சகோதரப் பிரயாணிகள்.

ஜான் நார்வே தேசத்து வாலிபன். நார்வேயில் மீன்களைப் பதம் செய்யும் ஒரு தொழிற்சாலையின் சொந்தக்காரன். அமெரிக்காவில் தன்னுடைய வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக வந்திருந்தான். 1400 ரூபாய்க்குப் புதிய செவர்லட் கார் ஒன்று வாங்கினான். தாராளமாகச் செலவு செய்வான். மிகவும் பரந்த மனப்பான்மை யுடையவன். மோட்டார் ஓட்டுவதிலே மிகத் தேர்ச்சி பெற்றவன்.

வால்த்தர் அசல் நாஜி. **பிராங்க் போர்ட்** என்ற ஊரிலிருந்து வருபவன். ஆங்கிலம் கற்

றுக்கொள்வதற்காக அமெரிக்காவுக்கு வந்தவன். சர்வகாலமும் நாஜிப் பிரசாரமே செய்து கொண்டிருப்பான். அவனைக் கேலி செய்து மண்டையி லடிப்பதுதான் எங்கள் மூவருக்கும் வேலை. மரங்களைக் கண்டு விட்டால் போதும்; குரங்கைப் போல அவற்றில் ஏறிக் கொள்வான். இவன் கத்தோலிக்கக் கிறிஸ்துவன். பிரார்த்தனை செய்யமட்டும் தவறவே மாட்டான்.

வாட் ஹாலந்திலுள்ள ரோட்டர்டாம் நகரிலிருந்து வந்தவன். தான் ஒரு கணித நிபுணன் ஆகவேண்டு மென்பது அவன் ஆசை. சாதாரணமான வாட், இவ்வளவு பேராசை கொள்ளக் கூடாது. அவன் மோட்டார் ஓட்டினால், உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தான் செல்லவேண்டும். ஒரு நாள் ஒரு நாயை நடு ரோட்டில் கொன்று விட்டான். அன்றைய தினம் நாயைக் கொன்ற பாவத்திலிருந்து வாட்டைக் காப்பாற்றும்படி, நாங்கள் மூவரும் கடவுளைப் பிரார்த்தனை செய்தோம்.

மே மாதம் 21-ஆம் தேதி பிரயாணம் ஆரம்பிப்பதென்று முடிவு செய்தோம். பிரயாணத்துக்கு நான்கு தினங்களுக்கு முன்

னிருந்தே விருந்துகள் ஆரம்பமாயின. ஆனல், குறிப்பிட்டபடி புறப்பட முடியவில்லே. கார் ரிப்பேர் ஆகிவிட்டது. வீட்டிலுள்ளவர்களெல்லாரும் எங்களேக் கேலி செய்தார்கள். மூன்று முறை அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டோம். மீண்டும் விடைபெற, எங்களுக்கு வெட்கமாக இருந்தது. கடைசியாக 24-ஆம் தேதி பிரயாணமானேம்.

மோட்டாரின் நான்கு ஜன்னல்களுக்கும் எங்களது நான்கு தேசக் கொடிகளேயும் கட்டினேம்; மத்தியில் அமெரிக்கக் கொடி. Tent ஒன்று விலேக்கு வாங்கி, காருக்குப் பின்னல் உள்ள பெட்டியில் வைத்துக் கொண்டோம்.

ஜான் முதலாவது டிரைவர். வாட் உதவி டிரைவர். பண வரவு செலவு செய்து கணக்கு வைத்துக்கொள்ளும் வேலேயும் அவனுடையது தான். வால்த்தர் காரில் பிரயாணம் செய்யும் பொழுது, தனது மடியிலேயே டைப்ரைட்டரை வைத்துக்கொண்டு, தினசரி ரிப்போர்ட் தயார் செய்வான். பிரயாணம் முழுவதிலும் நான் 512 போட்டோக்கள் எடுத்தேன். இதுதான் எனது வேலே.

'காண்டினெண்டல் ஆயில் கம்பெனி' (Continental Oil Company) என்பது அமெரிக்காவிலுள்ள பிரபலமான பெட்ரோல் வியாபார ஸ்தலங்களில் ஒன்று. இதனைச் சுருக்கமாக கோனேகோ (Conoco) என்று கூறுவது வழக்கம். அமெரிக்காவில் எங்கெந்தப் பகுதியில் நாம் பிரயாணம் செய்ய விரும்புகிறோம் என்று இவர்களுக்கு எழுதினால், இவர்கள் உடனே, நாம் எங்கெந்த ஸ்டேட்டுகளின் வழியாகப் பிரயாணம் செய்கிறோமோ அந்தந்த ஸ்டேட்டுகளின் ரஸ்தாப் படங்களை வரிசைக்கிரமமாகச் சேர்த்து,மற்றும் பல குறிப்புகளையும் இணைத்து, பெரிய புத்தகமாக அனுப்புவார்கள். இந்தப் புத்தகத்தின் உதவியால், முன் பின் தெரியாத நாட்டில் 15,000 மைல் பிரயாணம் செய்தோம். குறிப்பிட்ட இடத்துக்குச் செல்லும் வழி எது என்று எவரையாவது நாங்கள் ஒருபொழுதும் கேட்டதே கிடையாது.

கோனேகோவுக்கு அமெரிக்கா முழுவதிலும் பெட்ரோல் பம்புகள் இருக்கின்றன. முக்கியமான இடங்களிலே பிரயாணிகள் இரவில் தங்குவதற்காக, பல மர வீடுகளை (Tourist Cabins)

வசதிகளுடன் கட்டிவைத்திருக்கிறார்கள். நம் முடைய தபால்களை யெல்லாம் இந்த வீடுகளின் மூலமாக நாம் பெற்றுக்கொள்வதற்கும் ஏற் பாடுகள் செய்திருக்கிறார்கள்.

இந்தக் கம்பெனியாரின் பெட்ரோல் பம்புக்கு முன்னால், ஒரு மோட்டார் வந்து நின்று விட்டால் போதும். ஒரு வேலைக்காரன் கண்ணாடியைத் துடைப்பான். மற்றொரு வேலைக்காரன் யந்திரம் சரியாக விருக்கிறதா என்று பார்ப்பான். மூன்றாவது வேலைக்காரன் மோட்டாருக்குத் தண்ணீர், காற்று முதலி யவை சரியாக இருக்கின்றனவா என்று கவனிப்பான்.

பெட்ரோலை காஸ் (Gas) என்று அவர்கள் சொல்வார்கள். நம்மிஷ்டப்படி பெட்ரோல் போடும்படி கூறலாம். அதாவது, ஐந்து காலன் பெட்ரோல் போடு என்றோ அல்லது இரண்டு டாலருக்குப் பெட்ரோல் போடு என்றோ கூற லாம். எல்லாம் இரண்டு அல்லது மூன்று நிமிஷங்களுக்குள் தயாராகிவிடும்.

அமெரிக்காவின் நிலப்பரப்பு இந்தியாவை விட மூன்று மடங்கு அதிகம் என்று ஏற்கனவே

கூறியிருக்கிறேன். அமெரிக்காவில், கிராமங்கள் மிகக் குறைவு. 'பண்ணை வீடுகள்' (Farm Houses) அதாவது குடியானவர்கள் வசிக்குமிடங்கள் அங்கங்கே காணப்படும். இந்த இடங்களில் அந்தந்த நிலங்களுக்குச் சொந்தமான சில குடும்பங்கள்தான் இருக்கும். இந்தக் குடும்பத்தார்கள் தங்களுக்கு வேண்டிய சாமான்களை வாங்குவதற்கு அடுத்த ஊர்களுக்குத்தான் வரவேண்டும். பல விவசாயிகள் சொந்த மோட்டார் வைத்திருக்கிறார்கள்.

பிரயாணத்தின் போது, சில சமயங்களில் ஐம்பது அல்லது அறுபது மைல்கள் வரை வீடுகளையோ அல்லது மனிதர்களையோ பார்க்க முடியாது.

முதல் நாள் இரவு, வீதியின் ஓரத்திலுள்ள ஒரு சிறிய இடத்தில் கூடாரமடித்து உறங்கினோம். மறுநாள் ஐந்து விரல் ஏரியின் கரைவழியாகவே பிரயாணம் செய்து, ராச்செஸ்டரை (Rochester) அடைந்தோம். அங்கே ஏரிக் கரையில் கூடார மடித்தோம்.

ராச்செஸ்டர் நகரில்தான் பிரபலமான கோடக் (Kodak) கம்பெனி இருக்கிறது. ஜார்ஜ்

ஈஸ்ட்மன் (George Eastmen) இதனை ஆரம்பித்தார். கோடக் பார்க்கின் விஸ்தீரணம் 400 ஏக்கர். இங்கே 80 கட்டிடங்கள் இருக்கின்றன. 16,000 தொழிலாளிகள் வேலை பார்க்கிறார்கள். 71 விதமான போட்டோச் சாமான்களும், 300 விதங்களுக்கு மேற்பட்ட ரஸாயனச் சரக்குகளும் (Chemicals) தயாரிக்கிறார்கள். இவைகளைத் தயாரிக்க, வாரமொன்றுக்கு ஐந்து டன் வெள்ளியும் எண்பது டன் பஞ்சும் செலவாகின்றன.

சினிமா பிலிம்களுக்கு எமல்ஷன் (Emulsion) தடவி, அவைகள் துவாரம் (Perforation) செய்யப்படுவதைப் பார்த்தோம்.

இருட்டான ஒரு ஹாலில் சுமார் 200 பெண்கள் ரோல் பிலிம்களைச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். இங்கே மிகச் சில சிவப்பு விளக்குகள் காணப்பட்டன. மற்றொரு இருட்டான ஹாலில் சுமார் 75 பெண்கள் அதிகச் சக்தியுள்ள (Super-sensitive) பிலிம் சுருள்களைச் சுற்றிக்கொண்டிருந்தார்கள். பெண்களுக்குப் பதிலாக, இப்பொழுது மெஷின்களே இந்த வேலைகளைச் செய்கின்றனவாம்.

கோடக் கம்பெனியார், தங்களுக்கு வேண்டிய பேப்பர், தகரம் முதலியவைகளைத் தாங்களே தயார் செய்து கொள்ளுகிறார்கள். மாதந்தோறும் லட்சக் கணக்கான அடிகள் சினிமா பிலிம்களை ஹாலிவுட்டுக்கு அனுப்புகிறார்கள். கோடக் கம்பெனியின் நடைமுறைகளை எல்லாம், அங்கே உள்ள ஒரு அழகிய சிறு தியேட்டரில் கலர் சினிமாப் படமாகக் காண்பித்தார்கள்.

நயாகரா நீர் வீழ்ச்சி: அன்று மாலையே **நயாகரா நீர் வீழ்ச்சிக்குச்** சென்றோம். துரதிர்ஷ்ட வசமாக மழை பெய்துகொண்டிருந்தது. இந்த நீர் வீழ்ச்சிகளில் ஒன்று அமெரிக்காவையும் மற்றொன்று கனடாவையும் சேர்ந்தது. அமெரிக்காவின் பக்கத்திலுள்ள நீர் வீழ்ச்சியின் அகலம் 2,500 அடி. கனடாவின் பக்கத்தில் உள்ளதன் அகலம் 1,300 அடி. இரண்டு நீர் வீழ்ச்சிகளின் உயரமும் சுமார் 160 அடி. இந்த நீர் வீழ்ச்சிகளில் 6,60,000 குதிரைச் சக்தி (Horse-power) உள்ள மின்சாரத்தை உற்பத்தி செய்கிறார்கள்.

மறுநாள் காலை கிளீவ்லண்ட் (Cleveland) போய்ச் சேர்ந்தோம். இது அமெரிக்காவி

லுள்ள பெரிய நகரங்களில் ஒன்று. இங்கே ஒய். எம். சி. ஏ. யில் தங்கியிருந்தோம். அன்று காலைப் பத்திரிகையில், ராக்பெல்லர் மரண மடைந்தா ரென்றும், அவருடைய மரண ஊர் வலம் அன்று மாலை நடைபெறு மென்றும் படித்தோம். ராக்பெல்லரின் சொந்த ஊர் கிளீவ்லண்ட்.

இரண்டு தினங்களில் வட துருவ யாத்திரை (Great Lake Expedition) சம்பந்தமான பெரிய பொருட்காட்சி ஒன்று திறக்கப்படும் என்று கேள்விப்பட்டோம். பொருட்காட்சி ஆரம்பமாகி விட்டதென்றும், ஆனால், இன்னும் உத்தியோக முறையில் திறக்கப்பட வில்லை யென்றும் கூறினார்கள். ஒரு நாள் இராமுழு தும் பொருட்காட்சியில் செலவிட்டோம். வட துருவ யாத்திரைக்குச் சென்ற ஒரு கப்பலும், அமெரிக்க அரசாங்கத்தின் நீர் மூழ்கிக் கப்ப லொன்றும் காட்சியில் வைக்கப் பட்டிருந்தன. முதன் முதலாக, கிளீவ்லண்ட் பொருட்காட்சியில் தான் டெலிவிஷன் பார்த்தோம்.

ஜானுக்கு அறுபது மைல் வேகத்துக்குக் குறைந்து கார் ஓட்டுவதென்றால் பிடிக்காது.

75 அல்லது 80 மைல் வேகம் போனால்தான், எங்களுக்கெல்லாம் உற்சாகமாக விருக்கும். அமெரிக்காவில் ரோடுகள் மிகவும் விசால மானவை. ஒரு பெரிய சாலையை நான்கு ரோடு களாகப் பிரித்திருக்கிறார்கள். முதல் இரண்டு ரோடுகள், கார்களும் டிரக்குகளும் போவதற்கு; மற்றும் இரண்டு ரோடுகள் கார்களும் டிரக்கு களும் வருவதற்கு. ரோடுகளில் மோட்டார்களைத் தவிர, வேறு எந்த விதமான போக்குவரத்தும் கிடையாது. சில ரோடுகளில் 45 மைல் வேகத் துக்குக் குறைவாகச் செல்லக்கூடாது என்று போர்டுகள் காணப்படும்! டிட்ராய்ட் (Detroit) நகரை நெருங்கும்பொழுது, பல டிரக்குகள், ஒவ்வொன்றும் மூன்று அல்லது நான்கு சிறிய மோட்டார்களை ஏற்றிக்கொண்டு, செல்வதைப் பார்த்தோம்.

டிட்ராய்ட் அமெரிக்காவிலுள்ள நான் காவது பெரிய நகரம். உலகப் பிரசித்திபெற்ற மோட்டார் உற்பத்திச் சாலைகள் இங்கேதான் இருக்கின்றன. போர்டு, கிரைஸ்லர், டிஸோட்டோ, செவர்லட் முதலிய எல்லாக் கார் களும் இங்கே உற்பத்தி செய்யப்படுகின்றன.

அமெரிக்காவில் உற்பத்தியாகும் மோட்டார்களில் நூற்றுக்கு எண்பத்தைந்து விகிதம் இங்கேதான் தயாராகின்றன.

டிட்ராய்ட் நகரின் ஓரத்தில் பெரிய ஆறு ஒன்று ஓடுகிறது. ஆற்றின் அக்கரை, கனடாவின் எல்லை. கனடாப் பகுதியிலும் தொழிற்சாலைகளை இந்த மோட்டார்க் கம்பெனிகள் ஏற்படுத்தியிருக்கின்றன. கனடாவில் உற்பத்தி செய்யப்படும் மோட்டார்களுக்கு, கனடாவிலும் பிரிட்டிஷ் நாடுகளிலும் குறைவான வரி விதிப்பார்கள் என்பதற்காகத்தான், அமெரிக்கர்கள் இந்தத் தந்திரத்தைக் கையாள்கிறார்கள்.

போர்டு தொழிற்சாலை: டிட்ராய்ட் நகருக்குச் சில மைல் தூரத்திலுள்ள போர்டு மோட்டார்த் தொழிற்சாலைக்குச் சென்றோம். தொழிற்சாலையின் முன்னே, ஆயிரக்கணக்கான மோட்டார்கள் வரிசை வரிசையாக நிறுத்தப்பட்டிருக்கின்றன. அத்தனையும் போர்டு தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்குச் சொந்தமான மோட்டார்கள்!

முதலில் போர்டு ஆபீசுக்குச் சென்றோம். அது ஒரு பிரம்மாண்டமான கட்டிடம். கட்டிடத்

தின் மத்தியில், சுமார் 20 அடி உயரமுள்ள குளோப் (Globe) ஒன்று வைக்கப்பட்டிருக் கிறது. உலகத்தில் எங்கெந்த ஊர்களில் போர்டு கம்பெனிகள் இருக்கின்றனவோ அங் தந்த ஊர்களெல்லாம் அதில் குறிப்பிடப்பட் டிருக்கின்றன.

கட்டிடத்தின் மத்தியில் ஒரு அழகான சினிமாத் தியேட்டரும் இருக்கிறது. அதில் போர்டு மோட்டார் தயாரிக்கும் விதங்களைப் பற்றிய படங்களை, சுமார் ஒரு மணி நேரம் காண்பித்தார்கள்.

1,096 ஏக்கர் விஸ்தீரணமுள்ள போர்டு தொழிற்சாலையில், லட்சத்தி இருபத்திரண்டாயி ரம் ஜனங்களுக்கு மேல் வேலை பார்க்கிறார்கள். போர்டுக்குச் சொந்தமான ரப்பர்த் தோட்டங் கள், தென் அமெரிக்காவில் ஏராளமாக இருக் கின்றன. கூடிய விரைவில், போர்டு மோட் டார்க் கார்களுக்குத் தேவையான டயர்களில் பாதிக்குமேல் போர்டு தொழிற்சாலையிலேயே தயாரிக்கலா மென்று நம்புகிறார்கள்.

தொழிற்சாலையில் அசெம்பிளி ஹால் என்ற இடத்துக்குச் சென்றோம். இங்கே மோட்

டாரின் பல பாகங்களையும் ஒன்ருக இணைக்கிருர்கள். பாகங்களை இணைத்து, மோட்டாரை உருவாக்குவதற்கு, மிகச் சில நிமிஷ நேரந்தான் ஆகிறது. போர்டு தொழிற்சாலைக்கு ஆற்று மார்க்கமாக இரும்பைக் கொண்டு வருகிருர்கள். அந்த இரும்பு, தொழிற்சாலைக்குள் வந்த 36 மணி நேரத்துக்குள், மோட்டார்களாக உருக் கொண்டு விடுகிறது. போர்டு கம்பெனியில் மட்டும் வருடம் ஒன்றுக்கு 15 லட்சம் மோட்டார்கள் விகிதம் தயாராகின்றன. இதுவரையில் 3 கோடி மோட்டார்களுக்குமேல் அந்தக் கம்பெனியார் தயாரித்திருக்கிருர்கள்.

அங்கே ஒரு நல்ல போர்டு மோட்டாரின் விலை ரூ. 1,400 தான். பெட்ரோல் விலை ஆறணு. அமெரிக்காவில் சட்டப்படி பேபி மோட்டார்களையும் 4 சிலிண்டர் மோட்டார்களையும் உபயோகிக்கக் கூடாது. அந்நாட்டில் தயாராகும் பேபி மோட்டார்கள் வெளி நாட்டு ஏற்றுமதிக்குத்தான்.

சிக்காகோ : பின்னர், சிக்காகோ நகருக்குச் சென்ளேம். அமெரிக்காவில் இரண்டாவது பெரிய நகரம் சிக்காகோ. இதன் ஜனத்

தொகை சுமார் ஐம்பது லட்சம் இருக்கலாம். ஒரு காலத்தில் சிக்காகோவில் பிரபலமான பல கொள்ளைக்காரர்கள் இருந்தார்கள். இப்பொழுதும் கூட, சில கொள்ளைக்காரர்கள் இருக்கிறார்களாம்.

பெரும்பாலும் அமெரிக்காவிலுள்ள நகரங்களெல்லாம் ஒரே மாதிரியாகத்தான் தோற்றமளிக்கும். வானளாவிய மாடமாளிகைகள், ஹோட்டல்கள், தியேட்டர்கள், டிரக் ஸ்டோர்கள் எல்லாம் ஒரே மாதிரி. சிக்காகோவிலுள்ள ஒரு ஹோட்டலில் மட்டும் 3,500 அறைகள் இருக்கின்றனவாம்.

கணக்கற்ற பொருட்காட்சிச் சாலைகள், பிரம்மாண்டமான தபால் ஆபீஸ் கட்டிடங்கள், நேர்த்தியான சர்வகலாசாலைக் கட்டிடங்கள், அறுபது மாடிகளுக்கு மேலுள்ள 'சிக்காகோ டிரிபியூன்' பத்திரிகைக் காரியாலயம் முதலியன சிக்காகோவில் முக்கியமாகப் பார்க்கத் தக்கவை.

'சிக்காகோ டிரிபியூன்' தினந்தோறும் ஆறு முறை வெளியாகிறது. தினமொன்றுக்கு எட்டு லட்சம் பிரதிகளுக்குமேல் அச்சிடப்

படுகிறதாம். இந்தப் பத்திரிகாலயத்துக்குச் சென்ற பொழுது, கனடாவில் இதற்குச் சொந்தமான காடுகளின் சினிமாப்படமொன்றைக் காண்பித்தார்கள். பேப்பர் செய்வதற்கு முக்கியமாக வேண்டுவது மரம் அல்லவா? தங்களுக்குத் தேவையான காகிதத்தை, இந்தக் கம்பெனியார் தாங்களே தயாரித்துக் கொள்கிறார்கள்.

மற்றொரு முக்கியமான இடம் ஸ்டாக்யார்ட்ஸ் என்பது. இங்கே தினந்தோறும் பல்லாயிரக் கணக்கான ஆடு, மாடு, பன்றி முதலியவைகளை, மின்சாரத்தினால் கொன்று, பக்குவம் செய்து, நாடெங்கும் அனுப்புகிறார்கள்.

சிக்காகோவிலிருந்து புறப்பட்டு இரண்டே தினங்களில் 1,050 மைல் பிரயாணம் செய்தோம். இரவு மூன்று மணிக்கு மிஸிஸிப்பி நதியைக் கடந்தோம். வழியிலுள்ள சிறிய ஊர் ஒன்றில் **ரோடியோ** (Rodeo) பார்த்தோம். **ரோடியோ** என்பது ஒரு வகை விளையாட்டு. குதிரைகளின் மீதோ அல்லது மாடுகளின் மீதோ சிலர் ஏறிக்கொண்டு, பந்தயமிடுவார்கள்; சண்டை போடுவார்கள். இவை

களைப் பார்க்கத் திரளான மக்கள் கூடு வார்கள்.

கொலராடோ என்ற ஸ்டேட்டின் தலைநகரான டேன்வர் நகரில் சில தினங்கள் தங்கினோம். பின்னர், பைக்ஸ் பீக் (Pikes Peak) என்ற மலையுச்சிக்குச் சென்றோம். மலை உச்சியில் எங்கும் ஒரே பனிமயம். இந்த மலையின் உயரம் 14,106 அடி.

நியூ மெக்ஸிகோவில் ஒரு நிலக்கரிச் சுரங்கத்துக்குச் சென்றோம். உள்ளே சென்று பார்ப்பதற்கு அனுமதி வேண்டுமென்று, அங்கே மானேஜராக விருந்த கார்டினரிடம் கூறினோம். உள்ளே சென்று பார்க்க டைரக்டரின் அனுமதி வேண்டுமென்றும், இல்லாவிட்டால் கண்டிப்பாகப் பார்க்க முடியாதென்றும் கார்டினர் கூறிவிட்டார். ஆனால், வால்த்தருக்கோ எப்படியாவது சுரங்கத்தைப் பார்த்துவிட வேண்டுமென்று ஆசை. வால்த்தர், கார்டினரிடம் சென்று, "இதோ பாருங்கள், உலகத்தின் மற்றொரு கோடியிலிருந்து ஓர் இந்திய மாணவன் வந்திருக்கிறான். அப்படி யிருக்கையில், நீங்கள் மறுப்பது நியாயமா?" என்று கெஞ்சினான்.

கார்டினர் உடனே, "இந்தியாவிலிருந்தா, உண்மையான இந்தியாவிலிருந்தா? என் வாழ்க்கையில் இப்பொழுதுதான் நான் முதன் முதலாக, ஓர் உண்மையான இந்தியரைப் பார்க்கிறேன். அவரையும் என்னையும் சேர்த்து ஒரு படம் எடுத்துத் தரவேண்டும்'' என்ருர். சொன்னதுதான் தாமதம். வாட் உடனே படம் பிடித்தான். சுரங்கத்தின் கதவு திறக்கப் பெற்றது. கார்டினரே எங்களை அழைத்துச் சென்று, பல இடங்களையும் காண்பித்தார்.

டவுஸ் என்ற இடத்தில் **இம்காப்** என்ற சிறந்த சித்திரக்காரரின் விருந்தினர்களாகத் தங்கினேம். இம்காப் மிக வயதானவர். தமது வாழ்க்கையில் பெரும் பகுதியையும் அமெரிக்க இந்தியர்களுடனேயே கழித்து, அவர்களைப் பற்றிப் புத்தகங்கள் எழுதியுள்ளார். அவர்களது வாழ்க்கையைக் குறித்த நூற்றுக் கணக்கான சித்திரங்களையும் அவர் வரைந்துள்ளார்.

மறுநாள் சிவப்பு இந்தியர்களின் வாசஸ்தலத்துக்குச் சென்ருேம். இந்த இந்தியர்கள் வசிக்கு மிடத்துக்கு **ரிஸர்வேஷன்** என்று பெயர். இங்கே வசிக்கும் இந்தியர்கள், இந்த

ரிஸர்வேஷன் எல்லையைத் தாண்டிச் செல்ல, அனுமதிக்கப்பட மாட்டார்கள். இவர்கள் அமெரிக்க அரசாங்கத்துக்கு வரி செலுத்தவேண்டியதில்லை. தங்களுக்குள்ளேயே ஒரு தலைவனைத் தேர்ந்தெடுப்பார்கள். அவன்தான் இந்த இந்தியர்களின் கவர்னர். ரிஸர்வேஷனில் உள்ள அத்தனை இந்தியர்களும் கவர்னருக்கு வரி கட்டவேண்டும். அந்த வரிப்பணத்தை, கவுன்சிலுடன் கூடிய கவர்னர், ரிஸர்வேஷனின் அபிவிருத்திக்காகச் செலவழிப்பார்.

புயோப்ளோ என்ற இடத்திலுள்ள இந்தியர்கள் சிறிது நாகரீகமானவர்கள். அவர்களில் சிலருக்கு, ஆங்கிலம், ஸ்பானிஷ் முதலிய பாஷைகள் தெரியும். இந்த இந்தியர்களின் ஜீவனத்துக்கு முக்கிய உபாயம் கிராமக் கைத்தொழில்தான்.

கிராண்ட் கான்யன், போல்டர் அணைக்கட்டு முதலியவைகளைப் பார்த்த பின்னர், லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தை அடைந்தோம்.

லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து, ஹார்லிவுட் மிகச் சமீபம். கொலம்பியா, வார்னர் பிரதர்ஸ் முதலிய ஸ்டுடியோக்களுக்குச் சென்று, படம்

பிடிக்கும்பொழுது பார்த்தோம். யூனிவர்சல் ஸ்டுடியோவின் உணவுச் சாலையிலே உணவருந்தினோம். யூனிவர்சல் பிக்சர்ஸின் நட்சத்திரங்களும் டைரக்டர்களும் அங்கே உணவருந்திக் கொண்டிருந்தார்கள்.

ஹாலிவுட்டின் ஜனத்தொகை சுமார் 3 லட்சம். இதில் மூன்றில் இரண்டு பங்கினர் நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ சினிமாத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

பேவர்லி ஹில்ஸ் (Beverly Hills) என்ற இடத்தில்தான் நட்சத்திரங்கள் வசிக்கிறார்கள். சில நட்சத்திரங்களின் வீடுகளுக்குச் சென்றோம். ஹாலிவுட்டில் மிக அழகிய சீனத் தியேட்டருக்குச் சென்றோம்.

சான் பிரான்ஸிஸ்கோவில் சில தினங்கள் தங்கினோம். நாங்கள் தங்கி யிருந்தபொழுது, பிரபலமான கோல்டன் கேட் பாலத்தின் (Golden Gate Bridge) திறப்பு விழா நடைபெற்றது. . ஆகாயவிமானத் திடலில், நியூயார்க்கிலிருந்து வந்த இரு நண்பர்களைச் சந்தித்தோம். நாங்கள் ஆறு பேரும் பிரத்தியேகமான ஓர் ஆகாய விமானத்தில், சான் பிரான்ஸிஸ்கோ,

ஓக்லண்ட் நகரங்களையும், பாலத்தையும் கண்டு களித்தோம்.

தென் கலிபோர்னியாவில், வானளாவிய சில மரங்கள் இருக்கின்றன. அவைகளின் உயரம் 30 அடிக்குமேல் இருக்கும். மிகப் பெரிய சில மரங்களும் இருக்கின்றன. ஒரு பெரிய மரத்தின் இடைவெளி ஒரு மோட்டார் செல்லக்கூடிய அளவு பெரிதாக இருக்கிறது.

போர்ட்லண்ட், சியாட்டேல், மோண்டானு முதலிய இடங்களின் வழியாக, நாஷனல் பார்க்கை அடைந்தோம். அதற்கடுத்த கிளாஸி யர் பார்க்கில், கரடிகள் சாதாரணமாக வீதி களில் திரிகின்றன. ஒரு கரடி எங்கள் மோட் டாருக்குள் வந்துவிட்டது. நாங்கள் கொடுத்த தின்பண்டங்களை வாங்கிக்கொண்ட பிறகு தான், அது வெளியில் ஓடிற்று.

கிராண்ட் கூலி அணைக்கட்டின் வேலை அப் பொழுதுதான் நடந்துகொண் டிருந்தது. அதைப் பார்த்துவிட்டு, சிக்காகோவுக்குப் பிரயாணமானோம். சிக்காகோவுக்குச் செல்லும் பொழுது, ஒரே நாளில் 651 மைல் பிரயாணம் செய்திருக்கிறோம்.

பதினையாயிரம் மைல் பிரயாணத்துக்கு அப்புறம், மீண்டும் நியூயார்க்கை அடைந்தோம்.

தலைநகரான வாஷிங்டனுக்கு, நான் மட்டும் தனியாக ரயிலில் சென்றேன். நிறத்துவேஷம் வாஷிங்டனை இன்னும் விட்டபாடில்லை. சயாம் தேசத்து ஸ்தானீகரை, ஒரு சமயம் நீக்ரோ என்று நினைத்து, சினிமாக் கொட்டகைக்குள் விட மறுத்துவிட்டார்கள்.

வாஷிங்டன் நகரின் ஜனத்தொகை ஆறு லட்சம். அங்குள்ள மோட்டார்களின் எண்ணிக்கை மூன்றரை லட்சம். ஆனால், வாஷிங்டன் நகருக்குப் பெருமையளிப்பது இது வல்ல; 'மக்களால், மக்களுக்காக, மக்களுடைய அரசாங்கம்' என்ற கொள்கையை நிலை நாட்டிய ஆபிரகாம் லிங்கனின் ஜீவகளையுள்ள அந்தப் பிரம்மாண்டமான பளிங்கு உருவச் சிலையும், அதற்கு முன்னே ஆயிரக் கணக்கான யாத்ரீகர்கள் தம்மை மறந்து தலைவணங்கி நிற்கும் உருக்கமான காட்சியுந்தான், வாஷிங்டன் நகருக்கும் அமெரிக்காவுக்கும் பெருமை யளிக்கின்றன.

சக்தி மலர்

சக்தி மலர்ப் பதிப்பு நூல்கள் தமிழ்மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் ஏற்ற உயரிய நற்கருத்துக்களையும் கற்பனைகளையும் தெளிவான, எளிய நடையில் வெளியிட எழுந்தனவாகும்.

ஐக்கிய அமெரிக்க நாட்டிற்குச் செல்லாத ஒரு தமிழன் இந்நூலை ஒரு முறை படித்தால், தான் அமெரிக்கா சென்று நேரிற் கண்டு அநுபவித்த அவ்வளவு உணர்ச்சி யடையலாம். அமெரிக்க மக்கள் கவலையின்றி வாழும் தன்மையையும், அந்நாட்டு வளப்பினையும், வனப்பினையும் விளக்கும் ஓர் அநுபவக் களஞ்சியமே இந்நூல்.

சக்தி காரியாலயம்
ஜ்யார்ஜ் டௌன், சென்னை